# தீபம்

தமிழ் இலக்கிய
மாத இதழ்



ஜன-பிப்ரவரி 1988

விலை ரூ 2

# தீபம் 20 ஆண்டு நிறைவுச் சிறப்பு வெளியீடுகள்

## 20 ஆண்டுகள் தீபத்தில் வெளிவந்த சிறந்த சிறுகதைகளின் தொகுப்பு

க. நா. சுப்ரமண்யம்
சுந்தர ராமசாமி
கி. ராஜநாராயணன்
ராஜம் கிருஷ்ணன்
நா. பார்த்தசாரதி
அசோகன்
தி. சா. ராஜு
ஆர். சூடாமணி
அசோகமித்திரன்
ஆதவன்
டி. செல்வராஜ்
சுஜாதா
மாலவன். சார்வாகன்
கு. அழகிரிசாமி
எழில்முதல்வன்
சி. வடிவேல்
இந்திரா பார்த்தசாரதி
சிதம்பர சுப்ரமண்யம்
ம. ந. ராமசாமி
தி. ஜானகிராமன்
வண்ணநிலவன்
நீல. பத்மநாபன்
வண்ணதாசன்
வா. மூர்த்தி
சுப்ரமண்யராஜு
கே. ராமசாமி
வல்லிக்கண்ணன்
நாஞ்சில்நாடன்
இராம. கண்ணபிரான்
கார்த்திகா ராஜ்குமார்
ஞானபானு
செ. யோகநாதன்
கனிலஷ்மணன்
பா. அமிழ்தன்
விட்டல்ராவ்
சா. கந்தசாமி
எஸ். சங்கரநாராயணன்
புரசு பாலகிருஷ்ணன்
மோகனன்
ஆ. மாதவன்
தீபப்ரகாசன்
ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி

**43 அனுபவங்களை 43 சிறுகதைகளாக 43 ஆசிரியர்கள் படைத்துள்ளார்கள்.**

## தீபம் கதைகள்

**நா. பார்த்தசாரதி** தொகுப்பாசிரியர்

**விலை ரூ. 35. பக்கம் 504.**

## 20 ஆண்டுகளாக தீபத்தில் வெளியான எழுத்தாளர்களின் எழுத்துலக அனுபவங்கள்

நகுலன்
ஹெப்ஸிபா ஜேசுதாசன்
அநுத்தமா
சுந்தர ராமசாமி
இந்திரா பார்த்தசாரதி
ர. சு. நல்லபெருமாள்
பி. வி. ஆர்.
மகரிஷி
வாசவன்
ஜி. சூசை
ஆ. மாதவன்
சி. எஸ். குணசீலன்
தி. சா. ராஜு
சரோஜா ராமமூர்த்தி
அசோகமித்திரன்
சார்வாகன்
நா. பார்த்தசாரதி
செ. கணேசலிங்கன்
ஆர்வி
ஆதவன்
கர்ணன்
சச்சிதானந்தம்
இலக்கியன்
வல்லிக்கண்ணன்

**24 ஆசிரியர்களின் 24 எழுத்துலக அனுபவங்கள்**

## தீபம் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்: **நா. பா.** விலை ரூ. 14.

வெளியீடு:

## கலைஞன் பதிப்பகம்,

**10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை-600017.**

# தீபம்

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்''

—பாரதி

23-வது ஆண்டு
இதழ்: 267
டிசம்பர்-1987—ஜனவரி-1988.

**Founder Editor :**
**NAA. PARTHASARATHY**


# நா.பா. அமரரானர் !

அமரத்துவம் நிறைந்த எண்ணற்ற படைப்புக்களை எழுதி இலக்கிய ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட நா.பா. அமரராகிவிட்டார்.

அயராமல், இலக்கியத்தின் புதினம், சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய எல்லாவிதத்துறைகளிலும் நூல்களை எழுதிக் குவித்த நா.பா.வின் கரம் எழுதிக் கொண்டிருக்கும்போதே, எழுதிய நிலையிலேயே ஓய்ந்துவிடடது.

உலகத் தமிழ் மாநாட்டுக்கான தமது மலேஷியப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய அவர் விமானத்திலேயே உடல் நலம் குன்றியிருந்ததால், உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார்.

சற்று உடல் தேறி அவர் வீடு வந்தும்கூட, விரைவிலேயே மறுபடி அவரை மருத்துவ மனையில் சேர்க்க வேண்டியதாயிற்று.

தமது சுயசரிதையின் இரண்டாம் அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கையில், திடீரென ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக தம் ஐம்பத்துநான்காம் வயதில் அவர் இயற்கை எய்தினர்.

அவரது பிரிவால் பெருந்துயருக்கு ஆளாகி இருக்கும் அவர் குடும்பத்தினர் அனைவருக்கும் தீபம் தன் ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

நா.பா.வின் மனைவி திருமதி சுந்தரவல்லி பார்த்தசாரதி, ஒரே மகனும் பதினைந்து வயது நிறைந்த பத்தாம் வகுப்பு மாணவனுமான நாராயணன், முதல் பெண் திருமதி பூரணி, நா.பா.வின் மாப்பிள்ளை திரு. சம்பத்குமார், மற்றும் உள்ள மூன்று பெண்களான செல்வி பாரதி, மீரா, நித்யா அனைவருக்கும் நா.பா.வின் நினைவு தொடர்ந்து வாழ்நாளெல்லாம் வழிகாட்டிவரும் என்பதில் சந்தேகமில்லை.

உலகெங்கும் பரவியுள்ள நா.பா.வின் இலக்கியக் குடும்பத்தினருக்கும் தீபம் தன் மனமார்ந்த ஆறுதல்களைத் தெரிவிக்கிறது.

தீபமே ஆறுதலைத் தேடித் தவிக்கும் தருணம் இது.

சக்கரவர்த்தியை இழந்த சாம்ராஜ்யம் மாதிரி, தீபம் அலுவலகமே தாங்க இயலா மௌனப் புலம்பலுடன் வெறிச்சோடிக் கிடக்கிறது.

நா.பா.வின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த இலக்கிய அன்பர்கள், உலகின் பல பகுதிகளிலிருந்து எழுதும் கடிதங்கள் மட்டும் தீபம் அலுவலகத்தில் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன.

நா.பா. இறக்கவில்லை. அவர் எழுத்துக்களில் அவர் வாழ்கிருர். அவர் லட்சியங்களில் அவர் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருப்பார்.

நா.பா.வின் லட்சியங்கள் நிறைவேற, அவரது ரசிகர்களும் நண்பர்களும் தொடர்ந்து பாடுபட்டு வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.


தீபத்தில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. ஆனல் அதே சமயத்தில் அவை அவற்றைப்படைத்த இலக்கியச் சிற்பிகளின் பொறுப்பு என்கிற கம்பீரமான பலத்தைச் சார்ந்து நிற்பவையுமாகும்.

# தீபம் பார்த்தசாரதி

சி. சு. செல்லப்பா

இந்த இருபதாம் நூற்றாண்டின் தற்காலத் தமிழ் இலக்கியத் துறையில் கிட்டத்தட்ட தொண்ணூறு ஆண்டுக் காலத்தில் தோன்றி வளர்ந்துள்ள நாவல், சிறுகதை பிரிவுகளில் பங்கு செலுத்தியுள்ள படைப்பாளிகளில் குறிப்பிடத் தக்கவர்களில் நா. பார்த்தசாரதி ஒருவர். முப்பத்தாறு நாவல்கள், இருபத்திஇரண்டு சிறுகதைத் தொகுப்புகள், இருபத்தியாறு கவிதை, கட்டுரை தொகுப்புகள் அளவுக்குப் படைத்திருக்கிறார். 'பிராலிபிக்' நிறைய எழுதும் வன்மையுள்ளவர் என்று குறிப்பிடலாம். முப்பதாண்டுக் கால இலக்கிய வாழ்க்கை அவருடையது. அந்தக் கால அளவுக்குள் கணிசமாக எழுதிய சாதனையும் அவருடையது. தமிழக வரலாற்று அடிப்படை கதையம்ச நாவல்கள் முதல் தற்கால, உடனிகழ்கால சமூக, பொருளாதார தேசியப் பிரச்னைகளை கதைப் பொருளாகக் கையாண்ட பலவித நாவல்கள் நா.பா.வின் பேனாவிலிருந்து வெளிவந்திருக்கின்றன. ரொமாண்டிக் என்ற உணர்ச்சி தீவிர, அற்புதப் பாங்கான கையாளல், யதார்த்த என்ற நடப்பியல் பாங்கான கையாளல் என்ற இருவித தோரணைகளையும் அவர் படைப்புகளில் காண முடிகிறது. தமிழ் வித்வான் பட்டம், பல்கலைக் கழக எம்.ஏ. பட்டமும் பெற்று பழமை, புதுமை இழைந்த நடை பாணியில் தற்காலத் தன்மையான உரைநடையைக் கையாண்டவர். அவருடைய படைப்புகளில் காந்திய நோக்கு காணப்படும். அவரது ஆத்மாவின் ராகங்கள் என்ற தேசிய நாவல் குறிப்பிடத்தக்க நல்ல படைப்பு. காந்திய லட்சிய நோக்கு நாவல். கலைத்தரமான சத்தான படைப்பு.

பத்திரிகாசிரியராக நா.பா. 'தீபம்' ஏற்றி வைத்தவர் சரியாக இருபத்தி மூன்று ஆண்டுக் காலம் (196 -1987) அது இலக்கிய ஒளி பரப்பிக் கொண்டிருந்தது. ''கல்கி'' வாரப் பத்திரிகையிலிருந்து விலகிய பின் ஒரு பெரிய மாதப் பத்திரிகையை நடத்த முற்பட்டு, கதை, நாவல், கவிதை, இலக்கியக் கட்டுரைகள், பேட்டிகள் மற்றும் அரசியல் குறிப்புகள் முதலியவற்றை வெளியிட்டு ஒரு கனமான பத்திரிகையாக வெளிக் கொணர்ந்தார். ஒரு கனமான கருத்து வெளியீட்டுப் பத்திரிகை பாபுலராகவும் ஜனரஞ்சகமாக இருக்க முடியாது என்பது அனுபவம் காட்டும் நியதி. எனவே அதுக்கு வாசக சமூகமும் அதிகமான பிரதி விற்பனையும் அவர் எதிர்பார்த்த அளவுக்கு ஏற்படவில்லை. இலக்கியத் தரமும் ஆழ்ந்த கருத்தும் கொண்ட ஒரு இலக்கிய (லிட்டில்) சின்ன பத்திரிகையாக மாறிவிட்டது தீபம். ஒரு இலக்கிய சின்ன பத்திரிகைக்கான மதிப்பு அதுக்குக் கிடைத்தது. அந்த மதிப்பு கிடைக்க தீபத்தில் வந்த சில அம்சங்கள் ஆதாரமாக இருந்தன. புதுக் கவிதை, விமர்சனம் பற்றி அதில் தனிக் கட்டுரைகள், பேட்டிகள், தொடர் கட்டுரைகள் பல வெளிவந்திருக்கின்றன. வேறு எந்தப் பத்திரிகையும் இலக்கியப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்பவைகள்கூட வெளியிட முற்படாத, துணியாத ஒதுக்கிவிடும் கட்டுரைகள், கட்டுரைத் தொடர்கள் அதில் வெளிவந்திருக்கின்றன. அப்படி வந்தவைகளில் 'மணிக்கொடிக் காலம்', 'சரஸ்வதி காலம்', 'எழுத்து அனுபவங்கள்', 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்', 'தமிழ் இலக்கிய உரைநடை', 'தமிழில் சிறுபத்திரிகைகள் வளர்ச்சி', இலக்கிய விமர்சனத் தேட்டம்' ஆகியன புத்தக அளவு தொடர்கட்டுரையாக வெளிவந்தவை. அவை தீபத்துக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்படுத்தின. ஒரு தற்கால இலக்கியப் பார்வை நா.பா.வுக்கு இருந்ததன் காரணத்தால்தான் இவற்றை அவர் வெளியிட்டார். இது தீபம் விமர்சனத் துறைக்கு செய்துள்ள தனித்த விசேஷ இலக்கிய பங்கு செலுத்தல் ஆகும். பார்த்தசாரதியின் நோக்கு இவை பற்றி ஏற்படாது போய் இருந்தால் இவை வெளிவந்தே இராது.

மனிதனுக அவர் பண்பானவர். எல்லோரிடமும் நட்பு கொண்டவர். பொறுப்பாகப் பேசுபவர். நல்ல நண்பர். நாட்டு நடப்பு பொதுவில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். காங்கிரஸ் கட்சி, சுதந்திரா, ஆர்.எஸ்.எஸ்., ஜனதா, இ. காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் உறவுகொண்டிருந்தவர். அகில இந்திய சாகித்ய அகாடமி கமிட்டி உறுப்பினராக இருந்தவர். குறிப்பிட்ட இலக்கியப் படைப்பாளிகளுக்கு பரிசு கிடைக்க வழி செய்தவர். அவருக்குப் பல ஆசைகள் உண்டு. இன்னும் பல செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அவரது குறைந்த ஆயுட் காலமான ஐம்பத்திநாலு வயது அவரது ஆசைகளைக் கனவாக்கிவிட்டது. அவரது

சாதனைகளையும் குறுக்கிவிட்டது. அவரது சீக்கிர மரணம் அவரோடு கால் நூற்றாண்டுக் காலம் நெருங்கிப் பழகிய எனக்கு ரொம்ப அதிர்ச்சி தந்தது. காலம் தன் வேலையை செய்வதுபோல காலன் தன் வேலையை செய்துவிட்டான். இது தவிர்க்க முடியாத நியதி. நா.பா.வும் தீபமும் மறக்க முடியாது. நா.பா.வை நினைவுபடுத்திக் கொண்டிருக்க தீபத்தை தமிழ் இலக்கிய வாசக உலகம் தொடர்ந்து இலக்கிய ஒளி வீசச் செய்து கொண்டிருக்கக் கூடுமானால் அதுவே அவருக்குத் தலைசிறந்த நீடித்த நினைவுச் சின்னமாக இருக்கும். ★

# அமரர் நா.பா.வுக்கு அஞ்சலி

அமரர் நா.பா அவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்தும் நண்பர்கள் கூட்டம் சென்னை மத்திய நூலகக் கட்டிடத்தில், ஜனவரி 13-ம் தேதி நடைபெற்றது. சென்னை முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலர் ரவீந்திரதாஸின் தீவிர முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலிக் கூட்டம் டிசம்பர் 24-ம் தேதியே நிகழ்ந்திருக்க வேண்டியது ஆகும். அந்நாளில் சென்னை முதலமைச்சர் எம்.ஜி ஆரின் திடீர் மரணம் ஏற்பட்டுவிட்டதால், நா.பா. இரங்கல் கூட்டம் தள்ளிவைக்கப்பட நேர்ந்தது.

இந்த அஞ்சலி நிகழ்ச்சிக்கு தி. க. சிவசங்கரன் தலைமை தாங்கினார். நா.பா. அவர்களின் நற்பண்புகளையும், ஆற்றலையும், நட்பு உணர்வையும் அவர் பாராட்டிப் பேசியபிறகு நா.பா.வை நன்கறிந்த நண்பர்கள் ஒவ்வொருவராக நினைவாஞ்சலி செலுத்தினார்கள்.

வாழ்வில் சாதாரண நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு, தனது அயராத உழைப்பினாலும் ஊக்கத்தாலும் தன்னம்பிக்கையினாலும் உயர்ந்தவர் நா.பா. எழுத்துத் துறையிலும், சமூக நிலையிலும் அப்படி ஒரு வளர்ச்சியைப் பெறுவதற்கு அவர் தன்னை தகுதிப்படுத்திக் கொண்டார். நா.பா. உழைப்பின் உருவமாகவும், தன்னம்பிக்கையின் உருவமாகவும், மற்றும் பல நற்பண்புகளின் வடிவமாகவும் விளங்கினார். முன்னேறி வளர்ச்சி பெற ஆசைப்படுகிறஇளைஞர்களுக்கு நா.பா. ஒரு நல்ல முன்னோடி ஆவார் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிட்டார்.

நா.பா.வை அவரது இளமைப் பிராயம் முதலே நன்கு அறிந்தவரும், 'தீபம்' வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து வந்தவருமான காஞ்சிபுரம் 'வியார்ஜி' (வி. ஆர். கோபாலகிருஷ்ணன்) நா.பா.வின் பிடிவாத குணத்தையும், உழைப்பதில் அவர் காட்டிய தீவிரத்தன்மையையும், சமூக நலன்களைப் பாதுகாப்பதில் அவருக்கு இருந்த அக்கறையையும், அவருடைய எழுத்துத் திரமையையும் சிலாகித்துப் பேசினார்.

நா.பா. நல்ல நண்பர். நண்பர்களுக்குப் பெரிதும் உதவும் இயல்பினர். இலக்கியவாதிகளிடம் மதிப்பும் அன்பும் கொண்டிருந்த படைப்பாளி. சாகித்திய அகாடமியில் அவருக்கிருந்த பொறுப்பை நன்கு பயன்படுத்தி இன்றைய இலக்கியத்துக்கும் இலக்கியகர்த்தாக்களுக்கும உரிய முறையில் கவனிப்பும் கவுரவமும் கிடைக்கும்படி உதவியவர். கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், இந்திரா பார்த்தசாரதி, தொ. மு சி. ரகுநாதன், பி. எஸ். ராமையா, க. நா. சுப்ரமண்யம் முதலிய இலக்கியவாதிகளுக்கு சாகித்திய அகாடமிப் பரிசு கிடைக்கக் காரணமாக இருந்தவர் நா.பா.தான் என்று அசோகமித்திரன் கூறினார். சொந்த முறையில் தமக்கும் நா.பா. செய்துள்ள உதவிகள் அதிகம் என்றும், அவரது மரணம் தமக்குப் பெரும் இழப்பு ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சி. சு. செல்லப்பா தமது நினைவுகளை உணர்ச்சிகரமாக எடுத்துச் சொன்னார். நா.பா.வின் நட்பு உணர்வை, அவரது இலக்கிய ஈடுபாட்டை, தம்மிடம் அவர் கொண்டிருந்த மதிப்பை எல்லாம் விவரித்துப் பேசிய செல்லப்பா தமககு 'தீபம்' பத்திரிகையுடன் உள்ள தொடர்பை விரிவாகச் சொன்னார். தாம் எழுத ஆரம்பித்த இலக்கியக் கட்டுரைத் தொடர் மூன்று முறையும் முற்றுப் பெருமலே நின்றுபோக நேர்ட்டதைக் குறிப்பிட்ட அவர், 'தீபம்' இலக்கிய இதழ் நின்றுவிடாது தொடர்ந்து வரவேண்டியதற்காக ஏதேனும் திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் அழுத்தமாகக் கூறினார்.

நா.பா. எழுத்துத் திறமையும், இலட்சிய நாவல்கள் படைப்பதில் ஆர்வமும் கொண்டிருந்தது போலவே, அரசியலிலும் சமூக முன்னேற்ற விஷயங்களிலும் அக்கறை காட்டி வந்தார். மனித உரிமைகள் பாதிக்

கப்படுகிற போதெல்லாம் அவர் பொங்கி எழுந்தார். தார்மீகக் கோபத்துடன் உணர்ச்சிகரமாக எதிர்த்தார். நா.பா. ஒரு போராட்டவாதி. ஆவேசமான சொற்பொழிவுகள் ஆற்றவும் துணிந்தார் என்று முற்போக்கு எழுத்தாளரும், வழக்கறிஞரும், 'சிகரம்' பத்திரிகை நடத்திப் பெயர் பெற்றவருமான ச. செந்தில்நாதன் சான்றுகளோடு விரிவாகப் பேசினார்.

பிரபல நாடக ஆசிரியரும், முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட திரைப்படங்களைத் தயாரித்துள்ளவருமான கோமல் சுவாமிநாதன், போராட்டக்காரரான நா பா. பற்றி விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார். 'கோபம் கொண்ட இளைஞர்' ('ஆங்ரி யங்மேன்') அவர் என்று குறிப்பிட்ட கோமல்' உரிமைப்போராட்டங்களில் நா.பா. கலந்துகொண்ட சந்தர்ப்பங்களையும், சொந்த உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது சமூக நலத்துக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் அவர் ஆற்றிய பங்கு பற்றியும் விவரித்தார்

திருப்பூர்கிருஷ்ணன் நா.பா. நல்ல ரசிகர் என்பதை விவரித்தார்.

கவிஞர்பொன்னடியான், நா.பா. இளைய தலைமுறையினருக்கு அளித்த ஊக்கத்தையும் உதவியையும் குறிப்பிட்டுப் பேசினார். இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகத் திட்டமிட்டுச் செயலாற்ற விரும்பிய நா பா.வின் நற்பண்புகளைப் பாராட்டினார். கவிஞர் கவிதை பாடியும் அஞ்சலி செய்தார்.

நா.பா. வெறும் இலக்கியவாதி மட்டுமல்ல. சமுதாயப் பார்வையுடன், ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடத் துணிந்த செயல் வீரருமகூட. சுய வளர்ச்சிக்காக மிகு தியாக உழைத்த அவர் நண்பர்கள், ஆற்றல் பெற்ற இளைஞர்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். அவர் நல்ல நண்பர். அதற்கெல்லாம் மேலாக, நல்ல பண்புகள் பலவும் பெற்றிருந்த சிறந்த மனிதர். அவரை அறிந்துள்ள அனைவரும் அவரைப் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது. நம் நினைவில் நா.பா என்றும் வாழ்வார் என்று தி.க.சி. தலைமை உரை கூறி முடித்தார்

வாழ்க நா.பா.

## பிற நிகழ்ச்சிகள்

சென்னை இலக்கியச் சிந்தனை, **215-வது** கூட்டத்தை நா.பா. இரங்கல் கூட்டமாக (26-12-87 அன்று) நிகழ்த்தியது. தி. க. சிவசங்கரன் நா.பா.வின் இலக்கியங்கள் பற்றி சொற்பொழிவாற்றினார். பலர் தங்கள் நினைவுகளை எடுத்துக் கூறினார்கள்.

கோவை பாரதி இலக்கியப் பேரவை 23-12-87 அன்று கோவை, டாக்டர் நஞ்சப்பா சாலையில், கவிஞர் சக்திக்கனல் தலைமையில் இரங்கல் கூட்டம் நடத்தியது. சேவற்கொடியோன், மு. வேலாயுதம் இரா. மதிவாணன் முதலியவர்கள் அஞ்சலி உரை ஆற்றினார்கள்.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 8-12-87ல் ஸ்வாகத் ஓட்டலில் ஒரு இரங்கல் கூட்டம் நடத்தியது. லக்ஷ்மி, சாண்டில்யன், கே. ஆர். வாசுதேவன், ஆதவன், சுப்ரமணிய ராஜு, நா. பார்த்தசாரதி ஆகிய எழுத்தாளர்களின் நினைவைப் பலரும் எடுத்துக் கூறினார்கள்.

# கடிதங்களில் கண்ணீர் வரிகள்...

27-11-87 அன்று ஆசிரியர் நா.பா. அவர்கள் சிங்கையைவிட்டு புறப்பட்டு, இடையிலே நோய்வாய்ப்பட்டு 13-12-87ல் அகால மரணம் அடைவார் என்று நாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவரது மறைவு தீபம் இலக்கியக் குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரிய இழப்பாகும். அவரைப் போன்று தைரியமிக்க ஓர் இலக்கியவாதியைக் காண்பது அபூர்வம். தம் கடைசி மூச்சுவரை பேனா பிடித்து எழுதிக் கொண்டே இருந்ததாக அறிந்தேன். அவரது ஆத்மார்த்த எழுத்துலக ஐக்கியம் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.

சிங்கப்பூர் இராம. கண்ணபிரான்

நா பா.வின் அகால மறைவு தமிழ் இலக்கியத் துறைக்கு நேர்ந்துள்ள மாபெரும் துரதிருஷ்டம். தாம் ஒரு சிறந்த படைப்பாளியாய்இருந்ததோடு "தீபம்" பத்திரிகை மூலம் தரமான பல புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்தும் பிற வகைகளிலும் அவர்

புரிந்துள்ள இலக்கியப் பணி மறக்க முடியாதது.

சென்னை ஆர். சூடாமணி

ஸ்ரீ நா.பா. அமரர் ஆனதறிந்தேன். எங்கள் குடும்பமே பரம துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. இங்கு கோலாலும்பூரிலும், சிங்கப்பூரிலும் இருந்தபோதே உடல் பலஹீனத்துடன் இருந்தார். இருப்பினும் 3, 4 தினங்கள் எங்கள் வீட்டிலும், சிங்கப்பூரில் நண்பர் இக்குவனம் இல்லத்திலும் நல்லபடிதான் தங்கியிருந்தார். அவர் கடைசி கடைசியாக எங்கள் வீட்டில் உண்டுறங்கி எங்களை ஆனந்தப்படுத்த வேண்டுமென்று இருந்திருக்கிறது. எப்படியும் நமது தீபம்தான் அவருக்கு நிரந்தர சின்னம்.

மலேசியா பைரோஜி நாராயணன்

அன்பிற்குரிய மணிவண்ணன் தீபம் நா. பார்த்தசாரதி காலமானது அறிந்து வருந்தினேன். அவர் அண்மையில் மலேசியாவில் நடந்த 6வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்காக வந்திருந்தபோது அவரது பேட்டியை மலேசிய டிவி ஒளிபரப்பியபோது கண்டு களித்தேன். அந்த நிகழ்ச்சி இப்போதும் எனது கண்ணுக்குள் நிற்கிறது.

புருணை மணிவாசகன்

பேரிடிபோன்ற செய்தி கேட்டுச் சொல்ல முடியாத அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன். எவ்வளவு பெரிய, ஈடுசெய்யவே முடியாத இழப்பு.

துபாய் பா. அமிழ்தன்

சிறிது காலமே அவர் என்னுடன் பழகியிருந்தாலும் அந்தக் குறுகிய காலத்தை என்னால் மறக்க முடியாது. இந்தத் துயரத்தை என்னாலேயே தாங்கிக் கொள்ள முடியாதபோது அவர்கள் குடும்பம் எப்படித்தான் தாங்கிக்கொள்ள போகிறதோ?

திருச்சி எஸ். முரளி

தொலைக்காட்சியில் நா.பா. அவர்களின் மறைவு குறித்த செய்தியைக் கேட்டு நெஞ்சம் ஒடிந்தேன். மிகப் பெரிய வேதனைக்கு ஆளானேன். இவ்வளவு வேகமாய் அவர் வாழ்க்கை முடிந்துவிட வேண்டுமோ? என் துயரத்தை எழுத்துக்களில் வெளிப்படுத்த முடியவில்லை.

சிவகங்கை மீரா

பிப்ரவரியில் எல்லோருமாகச் சேர்ந்து டில்லி போகலாம் என்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும் வேளையில் துயரச் செய்தி தாங்க முடியாததாக இருக்கிறது.

சிவகங்கை இளம்பாரதி

## விட்டல்ராவுக்குப் பரிசு

நவம்பர் 1987 தீபத்தில் விட்டல்ராவ் எழுதிய **'பந்து பொறுக்கி'** என்னும் சிறுகதை நவம்பர் மாதத்தின் சிறந்த சிறுகதையாக **இலக்கியச் சிந்தனையால்** (மதிப்பீடு செய்தவர் திரு. தி. இராமகிருஷ்ணன்) தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. திரு. விட்டல்ராவுக்கு நமது வாழ்த்துக்களை வாசகர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு. சமூக அநீதிகளைத் துணிவுடன் எதிர்த்த மாமனிதனை சமூகம் இழந்துவிட்டது.

தூத்துக்குடி த. மோகன்

அருமை நண்பர் தீபம் நா.பா. அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மனம் கலங்கினேன். எப்பொழுதோ மலரும் அபூர்வ மலர் அவர். இலக்கிய உலகம் அவர் மறைவினால் ஒரு பண்புமிக்க தமிழறிஞரை இழந்துவிட்டது.

கோவை சக்திக்கனல்

திரு. தீபம் நா.பா. அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றேன். இந்த அகால மறைவு, தமிழ் இலக்கிய உலகுக்குப் பேரிடி போன்ற துயரச் செய்தியாகும்.

ராஜம் கிருஷ்ணன்

நா.பா.வின் மறைவு தந்த அதிர்ச்சி இன்னும் நீங்காமலேயே உள்ளது. இந்த மாதம் தான் செம்மலரில் அவர்களின் நேர்காணலைப் படித்தேன். அவர்க்கு இப்படி ஒரு கட்டம் இத்துணை விரைவில் வரும் என்று எதிர் பார்க்கவில்லை.

திருப்பதி பாவண்ணன்

நவீன தமிழ் இலக்கியத்தில் இணையற்ற சாதனை புரிந்த இமயம் போன்ற மாபெரும் இலக்கியவாதி அமரராகிவிட்டார். நசிவு இலக்கியம் நலிந்து நல்ல இலக்கியம் மேம்பட வேண்டும் என்று ஓயாமல் போராடி வந்த பேரொளி தீபம் அணைந்துவிட்டது. ஆனால், அவர் உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள இலக்கிய தீபம் அவரது நினைவை என்றும் போற்றும் விதமாய் நிலைத்து நிற்கும்.

டில்லி எஸ். கிருஷ்ணமூர்த்தி

சீர்மிகு எழுத்தாளர், சிந்தனைத் தென்றல், காந்திய நெறியாளர், தமிழ்ப் பண்பின் காப்பாளர் நா.பா. அவர்களின் மறைவுக்கு

எங்கள் இதயமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிஞ்சிமலர், சத்திய வெள்ளம், ஆத்மாவின் ராகங்கள், பொன்விலங்கு போன்ற அவரது உயிரோட்டமுள்ள எழுத்துக்கள் அவரது மறைவிற்குப் பின்னும் எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கச் செய்யும்.

செயலர், அண்ணாநகர் இலக்கியந் பேரவை

தீரர் நா.பா. அவர்கள் மறைந்த செய்தியைக் கேட்டு நெஞ்சம் அதிர்ந்தேன். ஆத்மாவின் ராகங்களைப் படைத்த அவருடைய ஆத்மா விண்ணில் ராகமிடப் போய்விட்டதோ?

திருப்பதி ரகுபதி

ஆசிரியர், நல்ல நண்பர், இனியவர், இன்முகத்தவர், அந்த இலக்கியப் பேராசிரியனை காலம் இத்தனை வேகம் அழைத்துக் கொள்ளும் என்று நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. எவ்வளவு பெரிய இழப்பு. இந்த இழப்பை, எந்த நட்பினாலும நிறைவு செய்ய முடியுமென்று தோன்றவில்லை. சில அனுதாப வார்த்தைகள் வெறும் சம்பிரதாயமாகவே அமைந்து போவதுண்டு. எனது அன்பின் திரு. நா. பார்த்தசாரதி அவர்களின் இழப்பு உண்மையில் வார்த்தைகளற்ற பெரிய துக்கத்தின் இருட்டாகிவிடுகிறது. ஒன்றுமே புரியாத இருட்டு.

அன்னவரின் இலக்கிய சிருஷ்டிகள்—அவரது நல்ல சாதனைகளின் தீபம் ஆக ஒளி பெறட்டும். அந்த இன்முக இலக்கிய ஆசிரியரின் மரணம் இட்டுநிரப்பமுடியாத குறையை மட்டும் விட்டுச் சென்றிருக்கிறது. என்ன செய்வது? ஆமாம் பின்முறைக்காரரான நாம் செய்யத்தான் என்ன இருக்கிறது?

திருவனந்தபுரம் ஆ. மாதவன்

தமிழுக்காகவே தொண்டாற்றி வந்த ஓர் ஆத்மாவை தமிழ் அன்னை எடுத்துக் கொண்டு விட்டாளா?

திருச்சி பி. வைத்தியநாதன்

சகோதரர் நா.பா. அவர்களின் நாவலில் எம்.பி.ல் ஆய்வு செய்தேன். தொடர்ந்து பி எச்டி. ஆய்வுக்கும் அவரது நாவல்களையே ஆய்வுப் பொருளாகக் கொண்டு ஆய்வு செய்து வருகிறேன். அவர்களுக்கும் எழுதியிருந்தேன். சென்ற ஆண்டு அவர்களும் மனவுவப்புடன் கடிதம் எழுதியிருந்தார்கள். அவர்களை நேரடியாக பேட்டி காண எண்ணியிருந்தேன். ஆனால் இறைவன் விருப்பம் வேறுவிதமாக அமைந்துவிட்டது.

கோவை-43. பி. பார்வதி
பேராசிரியை

தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு, ஆழ்மான பண்பான நாவல்கள், சிறுகதைகள் படைத்தளித்த அற்புதமான எழுத்தாளர்.

வற்றாயிருப்பில் பழகிய இனிய நாட்கள் நெஞ்சில் வாடாமல் பசுமையாக இருக்கின்றன இலக்கியப் பூஞ்சோலையில் அபூர்வமாக மலரும் குறிஞ்சிமலர் என்றும் மணம் வீசி இலக்கிய அன்பர்களை மகிழ்விக்கும்.

நாச்சியார்கோவில்
சுப. கோ. நாராயணசாமி

'தீபம் இதழ்கள்—ஓர் ஆய்வு' (1975) என்ற தலைப்பில் நான் ஆய்வேடு தயாரிப்பதற்குப் பல வகைகளில் ஒத்துழைப்பு நல்கிய திரு. நா.பா. அவர்களுக்கு நன்றியுரை எழுதி முடித்துத் தட்டச்சுசெய்யும் நிலையில் நா.பா. அவர்களுடைய மரணச் செய்தி கிடைத்தது. கம்பீரமான அவர் உடலினின்று உயிர் பிரிந்தது என்ற செய்தியை மனம் அங்கீகரித்துக் கொள்ள நாட்களாயின. எனக்கு 16-11-87 அளித்த அவர் தம் பேட்டியில் வருங்கால எழுத்தாளருக்கு, பத்திரிகையாளருக்குக் கூறியுள்ள அறிவுரைகளைப் படிக்கும்போது அவர் தம் இறப்பை முன்னதாகவே உணர்ந்துதான் சொல்லினர் போலும். பழகுவதற்கு இனியவர். குறித்த நேரத்தில் தன் பணியைச் செவ்வனே முடிப்பவர், தன்னால் பிறருக்கு எந்த வித இடையூறும் ஏற்படாமல் காத்துக் கொள்ளல் என்ற பண்புநலன்களைக் கொண்டவர் நா.பா. நா.பா. அவர்களிடம் நான் தயாரித்த ஆய்வேட்டினை அளித்து ஆசிகள் பெற முடியவில்லை என்பதில் எனக்கு எல்லையற்ற வருத்தம்.

சென்னை-60. செ. சூடாமணி

என்னுடைய வழிகாட்டியான இலக்கிய மாமேதை நா.பா. அவர்களின் மரணச் செய்தி கேட்டு மனமுடைந்தேன்.

காட்டுமன்னார்கோயில்
கு. வேல்வேந்தன்

மாபெரும் இலக்கியச் செம்மலின் மரணம் முற்போக்கு ரசனை இலக்கியத்திற்குப் பெரும் இழப்பாகும். நா.பா.வின் பாத்திரப் படைப்புகள் இந்நேரத்தில் நம்மைப் போலவே கண்ணீர் மலர் சிந்தி கதறி நிற்கிற காட்சிகள் நம் மனக்கண்ணில் தோன்றுகின்றன. நா.பா.வின் இடைவெளியை நிரப்ப இனி யார்?

சூரங்குடி அ. முத்தானந்தம்

நம்மவர்களின் நல்லவர் நாவலர் நா.பா. அவர்களை நமன் தனது பாதையில் இழுத்துக் கொண்ட இதயத்தைப் பிழிந்திட்ட செய்தி கேட்டு துக்கித்துப் போனேன். நல்லவர்கள்

# தாயே! நீயெங்கே?

இலக்கிய உலகினில் பிறப்புத் தந்தாய்
பழமை புதுமைப் பாலம் போற்றினாய்
விலக்காப் பெயர்ப்பின் இலக்கியம் பெயர்த்தாய்
இந்திய ஒருமை நிலைக்களன் ஆக்கினாய்
இலக்காம் கொள்கைச் சத்தியம் ஊறறினாய்
எரியும் சுடரினில் பொலிவு ஏற்றினாய்
திலகம் எனவே என்னைத் தவழ்வித்தாய்
தவழ்ந்தது நடந்தது நிலைத்ததில் மகிழ்(ந்)தாயே!

பிணையும் பேட்டி கருத்துரை விவாதம்
கதையாம் கலசம் யாவும் மீட்டினாய
இணையும் சேர்க்கை இலக்கியத் தேட்டம்
புனையும் வார்ப்பில் மைல்கல் ஆக்கினாய்
கணையாய் வந்திடும் எதிர்ப்பு மருளவே
துணையது துணிவாம் பாதை நடத்தினாய்
இணையிலை என்றெனை உச்சிமோர அம்மா நீ
எங்கே தேடுமே தீபக் குழந்தையே!

கண்ணெனக் காத்து மடியில் வளர்த்தாய்
காலது நோகுமெனக் கண்ணிமை சுமந்தாய்!
விண்ணென உயர்த்தவே உழைக்க ஓடினாய்
என்னை வளர்க்கவே நீபட்ட பாடுகள்
பண்ணி இசைக்க ஒண்ணுமோ தாயே
உன்னில் வளர்ந்த என்னை ஒதுக்க
விண்ணில் வீடது வானவர் தந்தாரோ
நா.பா. என்றிடும் தாயே நீயெங்கே?

—கமலம் சங்கர்

நம் நாட்டில் வாழ ஏன் இப்படி இடமில்லாமல் ஆகிவிட்டதோ?

கரூர் கருவை வேணு

நா.பா. அவர்கள் மறைவுச் செய்தியறிந்து மிகவும் வேதனை அடைந்தேன், அவர் ஏற்றிய இலக்கிய தீபம் என்றும் அணையாமல் காப்பாற்றுங்கள்.

லால்குடி ஏ. கே. பாலு

நா.பா. மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். இலக்கிய உலகிற்கு இது ஈடுசெய்ய இயலாத இழப்பு.

தில்லைஸ்தானம் தி. சா. ராஜு

தென்கிழக்கு ஆசிய வானொலி கேட்டுக் கொண்டிருந்தேன். செய்திகளில் நா. பா. மறைந்த செய்தி கேட்டுப் பெரிதும் அதிர்ச்சி அடைந்தேன்.

நா. பா. இல்லாத இலக்கிய உலகத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

கோவை பாரதி தேவராஜன்

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளரும், நல்லிலக்கியம் நாளும் வளர தீபம் வாயிலாக கட்டிக் காத்தவரும், தேசபக்தியை, ஒருமைப் பாட்டுணர்வை தமது எழுத்துக்களிலும், சொற்பொழிவுகளிலும் பட்டிதொட்டியெங்கும் பரப்பிவந்த தியாகச் சுடர் தீபம் நா. பார்த்தசாரதி அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

ராஜபாளையம் பூ. அ. துரைராஜா

நம்பவே முடியவில்லை. ஓர் உறவினரை இழந்த சோகம் நெஞ்சைக்கவ்வியது நா.பா. இறந்தாலும் தமிழ் மக்கள் நெஞ்சில் அவர் எழுத்துக்களின் மூலம் வாழ்ந்துகொண்டிருப்பார்.

ஸ்ரீரங்கம் ஸி. செளரிராஜன்

உலகத் தமிழ் ஆறுவது ஆராய்ச்சி மாநாட்டிற்காக மலேசியா சென்றிருந்த நான் அங்கு திரு. நா.பா. அவர்களும் வருவதை அறிந்து பெருமகிழ்ச்சியுற்றேன் அன்று.

மலேசியாவிலிருந்து திரும்பியதும் அவரது

# கைவசம் ஒரு சாவியுண்டு!

திறந்த ஞாபகமே
மறந்துபோய்
எல்லா இதயங்களும்
பூட்டப்பட்டிருக்கின்றன.
துரு
சாவிகளால் முடியாததைத்
தான் முயற்சிக்கப்
படிந்திருக்கிறது.
சில சுத்தியல்கள்
சமயம்
பார்த்திருக்கின்றது.
இதயங்களுக்கும்
அது தெரியும்
கைவசம் சாவியுண்டு
திறக்கத்தான் பயம்
துருவும் சுத்தியல்களும்
சந்திப்பதற்கு முன்
ஒரு மாற்றுப் பூட்டு
மாட்டிவிடவே
எல்லா இதயங்களும்
கவலைப்படுகின்றன.
சாவியை
என்ன செய்வது?
கைவசம்
சாவி வைத்துக்கொண்டால்
எப்போதும் சங்கடம்தான்.

—**வையவன்**

---

மறைவுச் செய்தி மட்டிலாத் துயரைத் தந்து மனத்தைக் கலங்க வைத்தது இன்று.

இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்ற வேண்டிய அப்பெருமகனார் மறைந்தது நமக்குப் பேரிழப்பாகும்,

பள்ளப்பட்டி ப. எழில்வாணன்

நேர்மைத் திறன், நெஞ்சுறுதி, நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த நடை, மனத்தில் எண்ணியதைத் துணிந்து கூறும் சொல்லாற்றல் இவைகளின் மொத்த உருவமாக வலம்வந்து தமிழுக்குத் தொண்டுசெய்த திரு. நா.பா. இன்று நம்மிடையே இல்லை.

தன் கொள்கையினை எழுத்தில், பேச்சில், இலக்கியத்தில், அரசியலில் விட்டுக்கொடுத்து பிறர்கட்டம் ஆதாயம்கருதி செல்லாதவர். அவர் சரித்திரத்தைப் படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். உண்மையான தமிழர்களின் மனத்தில் அவர் என்றும் நிறைந்திருப்பார் தமிழ் இருக்கும் வரை அவர் இருப்பார். தமிழ் நெஞ்சங்களில் எப்போதும் அவரது புகழ் குடிகொண்டிருக்கும்.

கோவை-41, ஜி.ஜி.ஆர்.

என்ன எழுதுவேன்! வார்த்தைகள் வரவில்லையே! தீபம் ஆரம்பித்த பிறகு தினம் தவறாமல் 'தீபம்' சென்று அவருடைய அன்பின் ஸந்நிதானத்தில் இருப்பேன். மணி சாஸ்திரிக்கு கிருஷ்ணமணி என்ற பெயர் அளித்தவர் நா.பா.தான். பி.எச்டி.க்கு தீஸிஸ் முடித்துவிட்டார் என்று கேள்வி. சுறுசுறுப்பான இயல்பு எவ்வாறு அடங்கி விட்டதோ? இன்னும் பல சாதனைகள் புரிய ஆற்றலுண்டு. ஆயுள் இல்லாமல் போய்விட்டதே!

சென்னை-94. ஒய்.ஆர்.கே. சர்மா

அடுத்த முறை பம்பாய்ப் பக்கம் வரும்போது நிச்சயம் உங்களுடன் வந்து தங்குகிறேன் என்று மார்ச்சு ஏழாம் தேதி எழுதியிருந்தார். அவரை நினைக்கும்போது...அந்த அன்புடனும் பரிவுடனும் கம்பீரத்துடனும் கூடவே நினைவில் வருவது—இலக்கியம் என்று வரும்போது யாருடனும் எதற்காகவும் 'காம்ரமைஸ்' பண்ணாத அந்த கர்வமும் நெஞ்சுரமும்தான்.

பம்பாய் உஷா மணியன்

இன்று காலை 'குறிஞ்சிமலர்' தந்த 'நெஞ்சக் கனல்', 'நிசப்த சங்கீத'மான துயரச் செய்தி அறிந்தேன். தமிழிலக்கியத்திலோர் பேரிழப்பு!

எம் 'நினைவின் நிழல்களி'ல் 'அறத்தின் குர'லாக, 'சத்திய வெள்ள'மாக, 'வெற்றி முழக்க'மாக 'ஆத்மாவின் ராகங்கள்' பாடிய அந்த 'மகாத்மாவைத் தேடி' எம் 'மனக்கண்' 'சுந்தரக் கனவுகள்' காண்கிறது.

'சமுதாய வீதி'யில் 'கோபுர தீப'மாக 'துளசி மாட'த்து 'அனிச்ச மல'ராக, ஒளி விடும் அந்த 'மூலக்கனல்' ஏற்றி வைத்த—'தமிழ் இலக்கியக் கதைகள்', 'இராஜகோபுரங்கள்' எண்ணிற் பல.

அந்த 'தீபம்' 'பிறந்தமண்'ணில் 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்று மட்டும் நாம் வெந்த மனதிற்கு மருந்து தடவிக் கொள்ளலாம்!

கவிஞன் என்ற முறையில் 'மணிவண்ணன் கவிதைகள்', 'சிந்தனை மேடை'யின் 'புதிய பார்வை'! 'ஒரு கவியின் உள்உலகங்களை' அதிற் கண்டோம்!

திருவனந்தபுரம் நெல்லை சு. முத்து

சிறுகதை:

# வீர வணக்கம்

கண்ணன்மகேஷ்

இவர்களின் ரயில் மாலை நான்கு மணிக்குப் போய்ச் சேர்ந்தது. ஸ்டேஷனில் ரயில் நுழைந்தபோது சக்கைப் போடு மழை. சிறிய ஊர் அது. மழைக்கு ஒதுங்க ஸ்டேஷனில் ஒழுங்கான பிளாட்பாரம்கூட இல்லை. இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்பு எல்லாப் பயணிகளுக்கும் ஒரே ஒரு வெயிட்டிங் ஹால்தான். அதையும் ஏதோ நாடோடிக் கும்பல் ஆக்ரமித்திருந்தது. தெருவோடு போன சைக்கிள்காரர்கள் மழைக்கு ஒதுங்கி இருந்தனர். 'பே, பே' என்று கத்திக் கொண்டு சில ஆடுகளும் அங்கே தஞ்சம் புகுந்திருந்தன. சுருட்டுப் புகை நாற்றம்.

இவனுக்குக் குமட்டியது. "இதுதான் உங்க ஊரா? இப்படி இருக்கும் என்று தெரிஞ்சிருந்தா வரவே சம்மதிச்சிருக்க மாட்டேன்."

"மழையினாலதான். இல்லேன்னா எங்க ஊர் நல்லா இருக்கும். வா, அதோ எதிரே தெரியும் கல் வீட்டுக் குறட்டுக்கு ஓடி விடுவோம். ஸாரி. கொஞ்சம் பொறுத்துக்கோ. நண்பர்கள் வந்துடுவாங்க..." என்று செல்வம் சிரிக்க முயன்றான். கையில் வைத்திருந்த கண்ணாடிச் சட்டம் இட்ட படமும், பூமாலையும் வேறு மழை நேரத்தில் சுமை.

எதிர் வீட்டுக் குறட்டுக்கு இவர்கள் இருவரும் வந்து சேர்ந்தபோது 'சர்சர்' என்று ஒன்பது மோபெட்டுகள் வந்து நின்றன. "ஹலோ, ஹலோ, ஹாய் செல்வம்! இவர்தான் கவிஞர் புதுமைதாசனின் மகனா? பேர் என்ன?"

வந்த ஒன்பது பேரில் மூன்று பேர் பெண்கள். ஒருத்திக்கு கவுனுக்குக் கீழே பால் வெள்ளைக் கால்கள். முடியைப் பின்னாமல் விட்டிருந்தாள். தலையைக் குலுக்கிப் பேசினாள். இன்னொருத்தி டைட் பேன்ட் போட்டிருந்தாள். குண்டு. அப்பா படப் பாடகிகளில் ஒருத்தி போல பெரிய பின் பக்கம். அசைய நடந்தாள். குட்டை, கட்டைப் பின்னல்காரி. மூன்றுமவள் சூடிதார் அணிந்தவள். வணக்கம் என்று கரம் குவித்தபோது கன்னத்தில் குழி. தோளில் மாட்டியிருந்த பிளாஸ்கின் மூடியைத் திறந்து மூடி வடிய சூடாக ஏதோ திரவத்தை ஊற்றி நீட்டினாள். "போர்ன்விடா சாப்பிடுங்க..."

அப்பாடா, இப்போதுதான் சற்று சுவாரசியமாக இருக்கிறது என்று நினைத்தான் அவன். செல்வம் அறிமுகத்தை ஆரம்பித்தான்.

"இவர்தான் நாம் உயிராக நேசிக்கும் அமரர் கவிஞர் புதுமைதாசனின் புதல்வர் தமிழ்மறவன். இவர்கள் ஹேமா, காயத்ரி, நிரஞ்சனா..." செல்வம் அடுத்துச் சொன்ன ஆண் பெயர்கள் தமிழ்மாறனின் செவிகளில் விழவே இல்லை. மூன்று பெண்களையுமே அவன் ஆர்வத்துடன் வெறித்தான். இலக்கிய சங்கத்தில் இப்படி மூன்று பெண்களைச் சேர்த்தானே செல்வம், அதுவே அவனுடைய ரசிகத் தன்மைக்குச் சான்று.

"போவோமா? லேசாய்த்தான் தூறுகிறது. மொபெட்டில் ஏழே நிமிடத்தில் போய்விடலாம்..." என்றான் செல்வம்.

"இளைய கவிஞரை நான்தான் ஏற்றிக் கொள்வேன்..." என்றாள் ஹேமா தோளிலிருந்து புஜத்திற்குச் சரிந்த சல்லாத் துணியை மேலேற்றி விட்டபடி.

"இப்படி ஒரு சவாரிக்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றான் தமிழ்மாறன்.

"மழையில் வண்டியை எடுத்து நான் கெடுத்து வைத்திருக்கிறேன் என்று என் அண்ணா வையாமல் இருக்க வேண்டும்" என்றாள் ஹேமா.

கண்ணாடிச் சட்டமிட்ட கவிஞர் புதுமைதாசனின் படத்தை ஒரு நண்பன் செல்வத்

திடமிருந்து மதிப்புடன் பெற்று ஒரு பையில் வைத்துத் தன் வண்டியில் பத்திரமாக வைத்துக் கொண்டான். பூமாலைகளை. சுற்றிய வாழை இலையுடன் இன்னொருவன் வாங்கிக் கொண்டான்.

இவர்களின் ஊர்வலம் பத்து நிமிடங்களில் கிராமத்தை அடைந்தது. ஒரு பெரிய மாடி வீட்டின் முன் நின்றது. வீட்டு வாசலில் பெரிய மாக்கோலம். வாசல் நிலைகளில் தோரணங்கள். பெண்களும் ஆண்களும் பளிச் என்று உடுத்தி ''வாங்க,வாங்க, மாடிக்குப் போங்க'' என்றனர்.

மாடியில் பெரிய கூட்டம். நெடுக விரித்த ஜமக்காளம். கூரையில் சுற்றும் விசிறிகள் போதாது என்று இரண்டு மூன்று நிற்கும் மின் விசிறிகள். கொளுத்தி வைக்கப்பட்ட ஊதுவத்திகளுக்குக் கணக்கே இல்லை. ஈமணி சங்கர சாஸ்திரியின் வீணை, கேசட்டில் மெல்ல சுழன்றது. 'நாத ததுமனிசம்...'

''முதலில் சிற்றுண்டி...''

வாஷ் பேசினில் கைகழுவி ஜமக்காளத்தில் வரிசையாக அமர்ந்தனர்.

''சின்ன புதுமைதாசனின் அருகில் நான், நான்...'' என்று பக்கத்திற்கு ஒருவராக தொடையோடு தொடை இடிக்காத குறையாக காயத்ரியும், நிரஞ்சனும் அமர்ந்தனர். ஹேமா ஹாட் ஷாட் காமிரா கொண்டு சுட்டுத் தள்ளினாள்.

''இப்படி ஒரு சிறந்த கவிஞருக்கு'மகனாக பிறந்த நீங்க ரொம்ப பாக்யசாலி. அவரின் கவிதைகளை எழுதின உடனே உங்கள் அம்மா படித்திருப்பார்கள். நீங்க சின்ன குழந்தையா இருந்த போதே அவர் இறந்துட்டாரு. ஆனாலும் சின்ன வயசிலே உங்களை மடியிலே வெச்சுக் கொஞ்சி, உங்களுக்குப் புரிஞ்சுதோ இல்லையோ, அதைப் பொருட்படுத்தாம கவிஞர் தன் கவிதைகளை உங்களிடம் பாடிக் காண்பித்திருப்பார் இல்லையா?'' என்றாள் காயத்ரி.

'இல்லையா' என்றபோது அவளின் காது ஜிமிக்கிகள் அழகாக அசைவதாக நினைத்தான் தமிழ்மாறன். பக்கத்தில் யார் வீட்டிலோ 'ஆப் ஜைஸா கோயி' என்று குர்பானி படப் பாட்டுக் கேட்கவும் 'ஆகா' என்று அவன் மனம் அங்கே போய்விட்டது. 'கறுப்பாக இருந்தாலும் இவள் என் மனதை என்னவோ செய்கிறாள் இவள் தன் கவிதை எதையாவது சொன்னால் ஆகா, பேஷ், பிரமாதம் என்று பாராட்டி முதுகில் தட்டலாம்...'

இலக்கியக்கூட்டம் ஆரம்பித்தது. மேசை மீது கவிஞர் புதுமைதாசனின் படத்தை அவரின் கவிதை நூல்களையே முட்டுக் கொடுத்து நிறுத்தினர். செல்வம் மாலை அணிவித்தான். கை தட்டினர்.

அவர்களின் இலக்கிய அமைப்பிற்கு (கைப்)'பிடி அவல்' என்று பெயராம். பதினைந்து பேர்கள் தான் உறுப்பினர்கள். அந்த மாடி வீட்டில் செல்வத்தின் அம்மா மற்றும் உறவினர்கள் வசிக்கின்றனர். செல்வம் ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டு அதே ஊரில் தனி அறையில் இருந்து வருகிறான். சாப்பாடு ஓட்டலில் தான். செல்வத்தின் அறையில் தான் வழக்கமாக இலக்கியக் கூட்டம் நடக்கும். இன்று தமிழ்மாறனுக்காக இந்த மாடியில் கூட்டம். அன்றிரவே புதுமைதாசனின் படம் பிடி அவலின் அலுவலமாகிய செல்வத்தின் அறைக்குச் சென்றுவிடும்.

செல்வம் நின்று பேசினான்- மற்றவர்கள் ஜமக்காளத்தில் ஒரு காலை மடக்கியும், மற்றதை நீட்டியும், முழங்கால்களைக் கைகளால் கட்டிக் கொண்டு , சப்பணமிட்டு உள்ளங்கைகளை ஊன்றிக் கொண்டும் அவரவர் சௌகர்யத்திற்கு அமர்ந்து பேச்சைக் கேட்டனர். சிலர் சிகரெட் பற்ற வைத்தனர். சிலர் ஏதோ பத்திரிகை புரட்டினர். இரண்டொருவர் தங்களுக்குள் மெல்லிய குரலில் பேசினர். ஒருவர் எழுந்து மூலையில் இருந்த மண் பானை அருகே சென்று தண்ணீர் குடித்தார். ஒருவர் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவினார்.

''யார் சிறப்பாக எழுதினாலும் அவர்களின் கையை முத்தமிட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள திறந்த மனத்துடன் நாம் இருக்கிறோம். முந்தா நேற்று முதல் எழுதுகிறாரா, நேற்று எழுதத் தொடங்கினாரா, இன்று இப்போதுதான் எழுதத் துவங்குபவரா என்றெல்லாம் பார்ப்பதில்லை. கன இலக்கியத்தின் பக்கம் நாம் எப்போதும் இருப்போம். சிற்றிலக்கியப் பத்திரிகைகளை ஆதரிப்பதே நம் லட்சியம். கவிஞர் புதுமைதாசனின் எல்லாக் கவிதைகளுமே நெஞ்சில் கனல் மணக்கும் அக்னிப் பூக்கள். தன்மானம் மிக்க படைப்பாளி. நான்கு வருடங்களுக்கு ஒரு கவிதை நூல் வீதம் திரட்டி, பணம் சேமித்து தானே வெளியிட்டவர். அவரின் ஆயுட் காலத்தில் ஏழு நூல்களையே அவரால் வெளிக் கொணர முடிந்தது. கைப்பிரதி நிலையில் இன்னும் பல படைப்புகள் வெளியுலகவெளிச்சம் காணாமல் உள்ளன. அவற்றை தமிழ் மாறன் எங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்...''

''இந்த உலகை உறக்கத்திலிருந்து எழுப்

பத் திருப்பள்ளி எழுச்சி பாடுவீர் தோழர்களே என்றும், அணுக்குண்டு என்ன செய்யும் ஏழை கொதித்தெழுந்தால் என்றும், எளியோர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும் நாளே சுதந்திரத் திருநாள் என்றும் உணர்ச்சி பொங்கப் பாடிய நம் கவிஞர் புதுமை தாசன் நம் நெஞ்சில் என்றும் வாழ்வார்...''

''படைப்பாளிக்கு சுயமரியாதை மிக முக்கியம். புதுமைதாசன் ஒரே ஒரு தமிழ் சினிமாவிற்குத்தான் பாட்டு எழுதினர். அந்த ஏழு பாடல்களுமே முத்தாக அமைந்தன. பாடல்களுக்கு சன்மானம் அளித்த இசை அமைப்பாளர், பேசிய பணத்தில் பாதியை மட்டும் கொடுத்து மீதியை...இது என்ன என்று புருவம் தூக்கிய கவிஞரிடம், ''இங்கே இப்படித்தான் வழக்கம் நீங்கள் தொடர்ந்து சினிமாவில் எழுத வேண்டாமா என்ருராம் இசை அமைப்பாளர். முழுப் பணத்தையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று கவிஞர் திரும்பிவிட்டார். பிறகு அவர் திரை உலகைத் திரும்பியே பார்க்கவில்லே. இதனுல் கவிஞருக்கு ஒன்றும் இழப்பு இல்லே...''

''புதுமைதாசனின் மைந்தர் தமிழ்மாறன் என்பதையே சமீபத்தில்தான் நான் அறிய நேர்ந்தது. மாதத்தின் கடைசி நாட்களில் சம்பளப் பணம் பெற்றுவர நான் கிளைக் கருவூலத்திற்குச் செல்லும்போது தமிழ்மாறனும் அவரின் அலுவலக சார்பாக வருவார். மரத்தடியில் காத்திருந்தபோது பேசினேம். அவரும் ஒரு கவிஞர் ஒருநாள் வீட்டிற்கு அழைத்தார். சென்றேன். வீட்டைச் சுற்றிப் பார்க்கையில் ஓரிடத்தில் குப்பையோடு குப்பையாக கவிஞர் புதுமைதாசனின் படம் ஒன்றும் கிடந்ததில் திடுக்கிட்டேன். இது என்ன நண்பரே என்றேன். ஆமாம். இதுதான் என் தந்தை என்ருர் தமிழ்மாறன் அலட்சியமாக. படத்தை எடுத்து தூசி துடைத்து மார்புடன் தழுவினேன். தமிழ்மாறனின் அனுமதியோடு அப்படத்தை எடுத்துச் சென்று கண்ணுடிச் சட்டமிடக் கொடுத்தேன். இன்று காலேயில்தான் கண்ணுடி போட்ட படத்தை வாங்கி வந்தேன். இனி புதுமைதாசன் நம்முடனேயே இருப்பார். புத்தி தீட்சண்யம் மிக்க அவரின் கண்களைப் பார்த்தால் நம் படைப்புகளில் வேகம் பிறக்கும். இனி புதுமைதாசன் நம்மை ஆசீர்வதித்துக்கொண்டே இருப்பார். வாழ்க புதுமைதாசனின் புகழ்!''

செல்வம்தான் உணர்ச்சிவசப்பட்டு சற்று நீளமாகப் பேசிவிட்டான். மற்ற பதினுன்கு பேரும் புதுமைதாசனின் கவிதை வரிகளை எடுத்துக் கூறி சுருக்கமாகப் பேசினர். தமிழ்மாறனும் பேச அழைக்கப்பட்டான்.

பதினேந்து பேரும் பேச அழைக்கப்பட்டபோது வணக்கம் முடித்தபோது நன்றி என்றெல்லாம் சம்பிரதாய வார்த்தைகள் கூறவில்லே. வீட்டில் பேசுவது போல இயல்பாகப் பேசினர்.

''செல்வம் அவர்களே, நரசிம்மன் அவர்களே, ஹேமா அவர்களே, காயத்ரி அவர்களே...''—தமிழ்மாறன் வணக்கம் சொல்லி முடிக்கவே பத்து நிமிடம் ஆயிற்று. பேச்சுக் கலேயைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எப்படிப் பாழ்படுத்தி வைத்திருக்கிருர்கள் என்று பிடி அவல் உறுப்பினர்கள் அடிக்கடிச் சொல்லி வருந்துவதுண்டு. அப்போதும் அந்த வருத்தம் ஏற்பட்டது.

''என் தந்தை இசை அமைப்பாளரைப் பகைத்துக் கொண்டு வாய்ப்பின்றி வெகு ஜனங்களின் மறதிக்கு ஆளாஞர். சுயமரியாதை மிக்கவர், அதனுல் நஷ்டம் ரசிகர்களுக்குத்தான் என்ருர் செல்வம். நஷ்டம் என் அப்பாவிற்கும்தான். அப்படி விறைப்பாக நிமிர்ந்து வாழ்ந்து அவர் கண்டதென்ன? வறுமையும் துன்பமும்தான். நம்மிடம் படைப்புத் திறன் மட்டும் இருந்தென்ன பலன்? எப்படியாவது வாழ்வில் முன்னுக்கு வரவேண்டும். ஓட்டை சட்டியாலுைம் என்ன, கொழுக்கட்டை வேக வேண்டும் என் தந்தை ஒரு பிழைக்கத் தெரியாதவர். எதை எதையோ நினேத்து தன்னேத் தானே ஏமாற்றிக் கொண்டு தவருன வாழ்க்கை வாழ்ந்தவர். அவரின் வழியும் நோக்கும் எனக்குச் சம்மதமில்லே என்று கூறிக் கொண்டு...''

''எங்கள் அழைப்பை ஏற்று வருகைதந்த திரு. தமிழ்மாறன் அவர்களுக்குப் பிடிஅவல் மனமார்ந்த நன்றி தெரிவிக்கிறது...'' என்று சுருக்கமாக முடித்துவிட்டாள் ஹேமா. உடனே ஒருவன் படேகுலாம் அலிகான் பாடல் கேசட்டைச் சுழலவிட்டான். ஒப்புக்குக் கும்பிட்டு எல்லோரும் சென்றுவிட்டனர். தன் பேச்சால் தமிழ்மாறன் அவர்களிடமிருந்து அன்னியப்பட்டு விட்டான். வரவேற்க வந்தபோது இருந்த உற்சாகமும், சரளப் பேச்சும் சிரிப்பும் அப்போது இருக்கவில்லே.

மழை பெய்த சுவடே இல்லாமல் வானில் நிலா புறப்பட்டது. செல்வமும், தமிழ்மாறனும் கைலி கட்டிக் கொண்டு கிளம்பி ஒரு வாய்க்கால் மதகு மீது அமர்ந்தனர். மௌனம். ஒரு மாலேப் பொழுது வீணு

## வாழ்க்கை

இரவில்
நீருற்றென்று
வெகுநேரம் விழித்தவர்
காலையில் கண்டது
கானல்நீர்! —பொள்ளாச்சிநசன்

யிற்றே என்று வருந்தினன் தமிழ்மாறன். கணவன் இறந்ததும் உடனே இறந்தவள் மண்டோதரியா, கோப்பெருந்தேவியா என்கிற தலைப்பில் இரண்டு நாளில் தான் கலந்து கொள்ள இருக்கும் பட்டிமன்றம் பற்றி நினைத்தான்.

''அண்ணே, சாப்பாடு ரெடி. வீட்டுக்கே சாப்பிட வர்றீங்களா?'' என்றான் ஒரு பொடியன் வந்து.

''ரூமுக்கே எடுத்தா. நாங்க வந்துட்றோம். இந்தா என் ரூம் சாவி...'' என்றான் செல்வம்.

''நீ ஏன் அம்மாவையும் வீட்டாரையும் பிரிஞ்சு இருக்க செல்வம்? ஏதும் கோபமா?'' என்றான் தமிழ்மாறன்.

''வா, சாப்பிடப் போவோம்...''

அறையில் செல்வத்தின் தங்கை சாப்பாட்டுடன் வந்து காத்திருந்தாள். ''ஏய், நீ ஏன் வந்த?'' என்று கோபித்தான் செல்வம்.

''ஐய, வந்தா என்னவாம்? அம்மாதான் அனுப்பினாங்க...''—தாவணி முனையைத் திருகியபடி, தமிழ்மாறனையும் திருட்டுப் பார்வை பார்த்தபடி. விலகிய மாராப்பை சரிசெய்ய மாட்டாளோ? தமிழ்மாறன் ஆர்வத்துடன் பார்த்தான். செழிப்பான கிராமத்துக் குமரி.

''செருப்பு பிஞ்சிடும். ஓடு வீட்டுக்கு. நாங்க எடுத்துப் போட்டு சாப்பிடுவோம். அடக்கமில்லாத நாய்ங்க...''

மௌனமாகவே சாப்பாடு முடிந்தது. பொடியன் வந்து ரஸ்தாளி வாழைப் பழங்களும், வெற்றிலையும் கொண்டு வந்தான். ''அண்ணா பத்து நிமிசத்துல வீட்டுக்கே வந்து பாலை சாப்பிட்டுப்போகும்படி அம்மா சொல்லச் சொன்னாங்க...''

''டேய், வீட்லேந்து இந்த அண்ணன் படுக்க பாய், தலகாணி, போர்வை, கூஜாலத் தண்ணி கொணந்து மொட்டை மாடில வெச்சிடு. என்ன?'' என்றான் செல்வம்.

பத்து நிமிடத்தில் செல்வமும், தமிழ் மாறனும் மாடி வீட்டுக்குச் சென்றனர்.

''வா தம்பி...'' என்று வரவேற்றாள் செல்வத்தின் அம்மா. குட்டையான வாசல் நிலை தமிழ்மாறனின் உச்சியில் இடித்தது. அதே சமயம் அவன் எதிர் சுவரைப் பார்த்தான். அங்கே பெரியஅளவில் ஜரிகைமாலை அணிந்த புகைப்படம்.

''ஆ! கவிஞர் ஜடாயு! எத்தனை சினிமாப் பாட்டுகள் எழுதி இருக்கிறார்! எவ்வளவு பிரபலம்! அவர் படம் இங்கே எப்படி...'' என்றான் தமிழ்மாறன்.

''அவர்தான் தம்பி, செல்வத்தின் அப்பா. எவ்வளவோ சம்பாதித்தார். நாங்க அந்த செல்வத்தை ஆள்கிறோம். இந்த செல்வத்தை இழந்துட்டோம்...'' என்று கண்கலங்கினாள் ஜடாயுவின் மனைவி.

முருகையா என்பவர்தான் அப்போது சிறந்த சினிமாப் பாடலாசிரியர். அவர் மீது ஏதோ சொந்த விரோதம் பாராட்டிய ஒரு சினிமாக் கதாநாயக நடிகர், ஜடாயுவைத் தன் படங்களில் பாடலாசிரியராக முருகையாவிற்கு எதிராக அறிமுகப்படுத்தினார். எடுபடவில்லை. மறுபடி முருகையாவும் நடிகரும் ராசியாகி, நடிகர் ஜடாயுவைக் கைவிட்டுவிட்டார். சில காலம் திரிசங்கு போலத் தவித்த ஜடாயு சில ஆண்டுகளில் மறுபடி திரைவானில் ஒளிவீசத் தொடங்கினார். இசை அமைப்பாளரின் அன்பை ஜடாயு நிரந்தரமாகப் பெற்றதற்கு ஒரு 'விலை' கொடுத்தார். இப்போது வயதாகித் தளர்ந்து போனாலும் இந்த அம்மா அந்த நாளில் எப்படி வசீகரமாய் இருந்திருப்பாள் என்று இப்போதும் ஊகிக்க முடிகிறது.

அதனால் என்ன? ஒரு மனிதன் வாழ்க்கையில் எப்படியோ திறமைகளைப் பயன்படுத்தி முன்னுக்கு வரத்தான் வேண்டும் என்று நினைத்த தமிழ்மாறன், ''அம்மா, கவிஞர் ஜடாயுவின் ஒரு ஃபோட்டோ எனக்கு வேணுமே? வீட்டில் கண்ணாடி போட்டு மாட்டுவேன்'' என்றான்.

பால் டம்ளர்களைக் கொடுத்தபடி திருமதி ஜடாயு, ''ஏம்பா, நீதான் உன் சினேகிதனுக்குச் சொல்லேன். அம்மாவிடம் கோபித்து இப்படித் தனியே இருக்கலாமான்னு...'' என்றாள்.

தண்ணீர் போல ஒரு விழுங்கில் தம்ளரைக் காலி செய்து தெருவை அடைந்த செல்வம் காறித் துப்பி நடந்தான்.

ஜடாயுவின் புகைப்படம் தேவை என்று கேட்டபடி அந்த வீட்டு நடையிலேயே நின்றிருந்தான் தமிழ்மாறன். ★

சிறுகதை:

# ஆசைகள்

சி. எம் முத்து

இவனுக்கு எப்போதும் தான் போட்டிருக்கிற வார் வைத்த பழுப்பு கலர் கால் சராயும் மேலே சந்தனக் கலரில் இருக்கிற சட்டை ஒன்று மட்டுமே போதுமென்றும் இனி வேறு ஒன்றும் தனக்குத் தேவையில்லை என்கிற மாதிரியும்தான் நினைத்திருந்தான் அப்போது.

தனது வயசையொத்த கூட்டாளிகளிடம் அடிக்கடி இப்படிச் சொல்லி ஆனந்தப்பட்டுக் கொள்வான், ''எலே பரமசெவம்,' நா இப்ப இருக்குற மாறியே இருந்துட்டா போரும்டா வேற எனக்கு ஒண்ணுமே வாணும்''—இவன் சதா நேரமும் இப்படிச் சொல்லிக்கொள்வது தன் வயசையும் சேர்த்துத்தான்.

இவனது அப்பா தீபாவளி சமயத்தில் நீலக் கலரில் கட்டமும் கட்டத்திற்குள் வெள்ளைப் புள்ளியுமாய்ப் போட்ட ஒரு அழகான சட்டையும் கறுப்பும் பழுப்பும் கலந்த மாதிரியான ஒரு வார இல்லாத கால் சராயும் தைத்துக் கொண்டு வந்து இவனிடம் போட்டுக் கொள்ளச் சொல்லிக் கொடுத்தபோது, இவன் அதை வாங்கி விநோதமாகப் பார்த்தான். இதைப் போட்டுக்கொண்டால் தான் முன்னைக் காட்டிலும் கொஞ்சம் நன்றாயிருப்போமோ என்கிற மாதிரிப் பார்த்தான். அப்போதும்கூட இவன் அந்தப் புதுச் சட்டைகளைப் போட்டுக் கொள்ளவில்லை. தெருப் பயல்களிடம் அது பற்றிய தகவலைச் சொல்லியதோடு, அப்பா வாங்கிவந்த அந்த ''புதுச் சட்டைகள் பிடிச்சிருக்கா?'' என்று அவைகளைக் காட்டிக் கேட்டபோது, ''டேய், ஜோரான சட்டைடா...போட்டா ஒனக்கு எப்புடி இருக்கும் தெரியும்ல்ல...போட்டுக்கடா...'' என்று பயல்கள் குஷிப்படுத்திச் சொன்னதை சாக்காய் வைத்தும், தானாய் ஒன்றும் அந்தச் சட்டையைப் போட்டுக் கொள்ளவில்லை என்கிற மாதிரியும் நினைத்துப் போட்டுக் கொண்டான்.

சட்டைகளைப் போட்டுக் கொண்டதும் இவன் சும்மாயிருக்கவில்லை. ''இது நல்லாருக்காம்மா?'' என்று முதலில் அம்மாவைக் கேட்டான். பிறகு அப்பா, அக்காள், தங்கை, அண்ணன் தம்பிகள் என்றெல்லாம் மாறி மாறி கேட்டுவிட்டு, தெருப்பயல்களிடமும் கேட்டான், ''நீ இப்ப ரொம்ப ஜோர்டா'' என்றபோது, இவன் அந்த வார்த்தையில் மயங்கிப் போனான். 'அது உண்மைதானோ' வென்று ருசுப்படுத்திக் கொள்வதற்காகத் தன்னை ஒரு சின்ன கண்ணாடி கொண்டு பார்த்தான். அந்தக் கண்ணாடி அப்போது சட்டைகளோடு தன் முழு உருவத்தையும் பார்க்கத் தோதானதாக இருக்கவில்லை. அதை மேலும் கீழுமாய் அசைத்துப் பார்த்தான் அப்போதும்கூட முழு உருவம் கிடைக்கவில்லை. ஒரே சமயத்தில் எவ்விதக்கஷ்டமுமில்லாமல் பார்க்கத் தோதானதாய் ஒரு கண்ணாடியிருந்தால் எப்படியிருக்குமென்று சிலாகித்து அந்த ஆசையை அப்பாவிடம் வெளிப்படுத்தின போது அவரும் மறுக்காமல் ஆள் உயரக் கண்ணாடி ஒன்று வாங்கிக் கொடுத்துவிட்டார்.

அப்பா அந்தக் கண்ணாடியை வாங்கி வந்து வீட்டில் வைத்த நிமிஷத்திலிருந்தே அதை விநோதமாகப் பார்ப்பதற்கென்று ஒரு கூட்டமே கூடிவிட்டது. விநோதமாகப் பார்த்தது போலவே விநோதமாகவும் விமர்சித்தார்கள். அதில் தங்கள் தங்கள் அழகுகளைப் பார்த்துத் திருப்திப்பட்டவர்கள் தானும் அது மாதிரி ஒன்று வாங்கிவிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டும் போனார்கள்.

முன்பு அப்பா தைத்துக் கொடுத்த வார் வைத்த அந்தப் பழுப்புக் கலர் கால் சராயும சந்தனக் கலர் சட்டையும் இப்போதெல்லாம் சுத்தமாய் அவனுக்குப் பிடிக்கவில்லை. அது வெளுத்தும் நைந்தும் கிழிசலாகும் பக்குவத்திலிருக்கிறது என்கிற மாதிரியும் தான் இப்போது கொஞ்சம் வளர்ந்த நிலையில் அந்தச் சட்டைகள் தன் உடம்புக்குத் தோதுப்படவில்லை என்றும் ஒதுக்க ஆரம்பித்தான்.

இப்போது இவன் கொஞ்சம் வளர்ந்த நிலையில் சிந்திக்க ஆரம்பித்திருக்கிற விஷயம் இதுதான். மற்றவர்கள் மாதிரி தான் கல்யாணம் கில்யாணம் பண்ணிக்கொண்டுவிடக் கூடாது—ஒரு பெண்ணுடன் சேர்ந்து போவதைக் காட்டிலும் அருவருப்பு உலகத்தில் வேறில்லை. தனக்கு மனைவி இருக்கக் கூடாது—குழந்தைகள் இருக்கக் கூடாது—'அப்பா' ஐயோ இதென்ன 'அப்பா'! ஒரு ஆண் பிள்ளையை அப்பாவென்று அசிங்கப்படுத்திக் கூப்பிடும் முறை...ச்சே...அப்பாவும் வேண்டாம். அப்பாவாகி தாத்தாவாகி கிழவனுகி மற்றவர்கள் மாதிரி நாமும் செததுப் போய்விடுவோம்—உலகத்தில் பிறந்தது சாவதற்குத் தானு? நான் சாகமாட்டேன். நான் அப்பாவாக வேண்டாம்—தாத்தாவாக வேண்டாம் கிழவனென்று யாரும் என்னைச் சொல்லவே கூடாது...அப்பாவானுலும்கூட பரவாயில்லை சாமி...தாத்தாவாகிவிடக் கூடாது. கூடவே கூடாது. தாத்தா...இதென்ன அசிங்கம். தாத்தா—அப்புறம் கிழவன்...ஐய்யோ... இதெல்லாம் வேண்டாம் வேண்டாம்...நான் இப்படியே —இப்போதிருக்கிறபடியே— இந்தப் பருவத்துடனேயே பயல்களுடன் விளையாடிக் கொண்டிருந்தால் எத்தனை சந்தோஷம்...

மனசுக்குள் இப்போதிருக்கிற திருப்தியும் சந்தோஷமும் இருந்துவிட்டால் போதுமென்று நினைத்தவன், பொருள்களாயினும் உலகத்தில் ஜனித்திருக்கிற எந்த வஸ்துக்களாயினும் தேவையே இல்லை என்பதாய் நினைத்துக் கொண்டான். உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் (வீடுகூட அவசியமா என்றுதான் ஒரு முறை நினைத்திருந்தான். உலகத்தில் ஜனித்திருக்கிறவைகளில் மனிதர்களைத் தவிர, எதற்கு வீடு இருக்கிறது—ஓ... இருக்கிறது! அவைகளுக்குக் கூடும், பொந்தும், புதரும் ஒடுங்கிக் கொள்ள இன்னும் எத்தனையோ மறைவான வழிகளும் இருக்கின்றன என்று யோசித்துக் கொண்டபோது தான் அவைகளைப் போல் தனக்கு ஒரு வீடும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது) என்ற தத்துவவாதிகளின் கோட்பாட்டு எல்லையைத் தாண்டி கொஞ்சம் மேலே தாவி விளையாடப் பயல்களும் மைதானமும்.. வயல்வெளிகளும் தோட்டமும் இருந்துவிட்டால் போதும் என்று மனசு முடிவாய்க் கொண்டுவிட்டது.

இந்த நினைப்பும் சிந்திப்பும் இவனது பதினைந்து வயசு வரைக்கும்தான் இவனுல் தாக்குப் பிடிக்க முடிந்தது. இவனுக்கு வயசு பதிறு ஆகியிருக்கிற இந்தப் பருவத்தில்தான் நெஞ்சில் இத்தனை நாளும் நினைக்காத எதெல்லாமோ தேவையாயிருக்கிற மாதிரி பட்டது. இன்னதென்று இனம்புரியாத தேவைகள் அது. தான் இத்தனை காலமும் அடியோடு வெறுத்திருந்தவைகளைப் பற்றியெல்லாம்கூட லேசாய் நினைக்கவும் சிந்திக்கவும் ஆரம்பித்திருந்தான்.

ரோட்டிலோ தெருவிலோ வேறு எங்கானுமோ வயசுப் பெண்கள் போய்க்கொண்டிருந்தால் அவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்க்கும்படி ஆய்விட்டது. மனசால் அவைகளை நொறுக்கிவிடப் பார்த்தும் முடியவில்லை. மீசை அரும்பு கட்ட ஆரம்பித்ததிலிருந்துதான் இந்தச் சிக்கல் அடிக்கடி அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் மனசை நெருடுகிறது. வியர்க்கிறது—நெஞ்சு பதைக்கிறது. ஏதோ அவர்களிடத்திலிருக்கிற ஒரு கவர்ச்சியைக் கண்டு மனசு அலைபாய்கிறது. அவர்கள் தனக்கு வேண்டுபோல—அந்தக் கவர்ச்சியும், அவர்களிடத்திலிருக்கிற நுண்மையும் அழகும் வனப்பும் தனக்கு வேண்டும் போல மனசு துடியாய்த் துடிக்கிறது.

எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் தனதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற துடிப்பும் தகிப்பும் நெஞ்சில் எழுந்தபோது தாம் ஒரு காலத்தில் பெண்களை வெறுத்தோமே எத்தனை முட்டாள்தனமென்று நொந்துகொள்ளும்படியாயிற்று. பெண் என்பவள் ஆணுக்கு எத்தனை அவசியத்தையும் ஆனந்தத்தையும் தந்துவிடுகிறுளென்றுஇப்போது மனசு நினைத்துக் கொள்கிறது. அது இப்போது இவனது வயசு கூடிக்கூடி இருபது இருபத்திரெண்டென்று ஆய்விட்டிருக்கிற இந்தப் பருவத்தில் பெண்ணே தன் மனசெங்கணும் எத்தனை கெட்டியாய் வியாபித்துக் கொண்டிருக்கிறுளென்று ஆச்சரியப்பட்டுப் போனுன்.

ஒரு பெண்ணை அடைய மற்றவர்கள் மாதிரி நாகரிகத்தையும் தன் தேவைகளையும் அதிகரித்துக் கொள்ளவும் வேண்டுமோமாவென்று சிந்தித்தான். அவளை அடைய மற்ற மற்ற ஆண்கள் செய்யும் தந்திர யுத்திகளையெல்லாம் செய்ய முயற்சி செய்தான். மற்றவர்களைப் போல தானும் கொஞ்சம் வளர்ந்து வரும் நாகரிகத்தைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். உடுத்துவதிலிருந்து கைக்குக்கடிகாரம் விரல்களுக்கு மோதிரமென்று வித்தியாசமானுன். இவன் தேவைகளாய் நினைக்காததெதுவும் தேவைகளாய் ஆகிக்கொண்டிருந்தன.

ஒரு பெண் இவனுக்குச் சொந்தமாகக் கிடைத்தபோது ரொம்ப மகிழ்ச்சியாயிருந்தது. அவளைச் சுகிக்கும்போதிருந்த இன்பத்

தைக் காட்டிலும் சுகிக்காதிருந்த நேரங்களில் எத்தனை எத்தனையோ இன்பங்களை அள்ளி அள்ளி தந்துகொண்டிருக்கிறுள் என்று இவனுக்குப் பட்டது.

ஒரு பெண்ணுடன் இப்படியே இந்தப் பருவத்துடனேயே இருக்கிற இந்த தேவைகளுடனேயே வாழ்ந்தால் போதுமென்றும் உலகத்தில் வேறெதுவும் இனி தனக்குத் தேவையில்லை என்பதாகவும் நினைத்துக் கொண்டபோது சந்தோஷமாயிருக்கிற மாதிரி இருந்தது.

மனிதர்கள் வைத்துக் கொண்டிருக்கிற சைக்கிள்...மோட்டார் — கார்—ரேடியோ— டி.வி. மற்றும் பற்பலவான நூதன பொருள்கள் எதுவும் தனக்குத் தேவையே இல்லை என்பதை விடாப்பிடியாக நினைத்துக் கொண்டவன் அதெல்லாம் சுத்த ஹம்பக்' என்பதையும் நினைத்துக் கொண்டான். இந்தப் பொருள்களுக்காகவெல்லாம் பணத்தை விரயம் பண்ணுவதென்பது சுத்த பைத்தியக்காரத்தனமானதும் முட்டாள்தனமானதென்றும் நினைத்துக் கொண்டான்,

இந்த மாதிரியான இவனின் நினைப்புகளையெல்லாம் தகர்த்தெறிந்துவிடும்படியான காலகட்டங்களும் சூழல்களும் இவனை விடாப்பிடியாய்த் தாக்கிக்கொண்டே இருந்தன. நெஞ்சில் உண்டாகியிருந்த வன்மமான நினைப்புகளெல்லாம் தவிடுபொடியாகின. இப்போது இவன் ஒரு குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறுன் என்பதை இவன் மனைவி கண்டுகொண்டிருக்கிறுள். அடுத்த வீட்டுக் குழந்தை, பக்கத்து வீட்டுக் குழந்தை, உறவுக்காரக் குழந்தையென்று இவன் ஒரொரு குழந்தையையும் தூக்கி மகிழும்போதுதான் தனக்கும் சொந்தமாக ஒரு குழந்தை இருந்தால் எத்தனை சந்தோஷமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான். அந்த நினைப்பு வீண் போகவில்லை. அவளைச் சுகித்ததால் தரித்த குழந்தை பிறந்து வளர்ந்து மழலை மொழியில் இவனை "ப்பா" என்று கூப்பிட்டபோது அந்தக் கொஞ்சு மொழியிலும் ரிதத்திலுமாய் மயங்கிப் போய் அப்படியே உச்சி மோந்து அக்குழந்தையை அணைத்துக் கொண்டு 'அப்பா' வென்ற சொல்லில் ஆனந்தத்தைக் கண்டான். ஆனாலும் தாத்தாவாகி விடக் கூடாதென்கிற நினைப்பையும் கூட இப்போதும் நினைத்துக் கொண்டான்.

இவன் வளர வளர இவனது தேவைகளும் வளர்ந்துகொண்டுதானிருந்தன. இவன் எத்தனைதான் கட்டுப்படுத்தியும் தேவையென்பது தன்கைத்தே அடக்க முடியாததென்று மாதிரி பற்பல உருவங்கள்கொண்டு வளர்ந்து கொண்டே இருந்தன. இபோதெல்லாம் தேவை என்பது இவனுக்கு மட்டுமானதாயிருக்கவில்லை. மனைவியின் தேவைகளும் குழந்தைகளின் தேவைகளும், அண்ணன், தம்பி அக்கா, தங்கை கிழவர்களாய்ப் போய் ஒடுங்கிக் குந்திவிட்ட அப்பா அம்மாவின் தேவைகளும் உறவினர்கள் நண்பர்கள் என்கிற பந்துக்களின் தேவைகளும்கூட தன்னுடைய தேவைகளெனவே ஆகிவிட்டன. இவன் அதற்காகவெல்லாம் சிந்தித்தான்— உழைத்தான். இவன் வேண்டாம் வேண்டாமென்று ஒதுக்கி ஒதுக்கி வைத்திருந்த எல்லாமும் இவனை வந்து சேர்ந்தன.

முதன் முதலாகத் தனக்கென்று ஒரு சைக்கிள் வாங்கியபோதுதான் அது அனுவசியமில்லையென்று இவனுக்குத் தோன்றியது. அதன் உழைப்பு இவனுக்கு எத்தனையோ சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்ததை நினைத்தபோது சந்தோஷமாக விருந்தது. ஒருநாள் என்றில்லை ஒரு மாதம் ஒரு வருடமென்று சைக்கிள் பற்றியே நினைத்திருந்தான். அதன் போஷாக்குக்காகவும் அதன் அழகுக்காகவும் நிறைய நேரங்களையும்

# சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா: | முழு ஆண்டு | ரூ. | 24 |
| | அரை ஆண்டு | ரூ. | 12 |
| இலங்கை: | ஸீ மெயில் | ரூ | 75 |
| | ஏர் மெயில் | ரூ. | 120 |
| மலேயா-பர்மா: | ஸீ மெயில் | ரூ. | 75 |
| | ஏர் மெயில் | ரூ. | 120 |
| ஐரோப்பா-அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகள்: | ஸீ மெயில் | ரூ. | 75 |
| | ஏர் மெயில் (U.S.A.) | ரூ. | 1_0 |
| | (U.K.) | ரூ. | 120 |

வெளியூர்ச் செக்குகளுக்குக் கலெக்ஷன் சார்ஜ் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விவரங்களுக்கு:

**தீபம் காரியாலயம்,**
6, நல்லதம்பி செட்டித் தெரு,
த. பெ. எண்: 2766
மவுண்ட் ரோடு, சென்னை-600 002.

பொருள்களையும் செலவு செய்தான். தான் வேலையற்று சும்மாயிருக்கிற நேரங்களிலெல்லாம் சைக்கிளைச் சீண்டிக் கொண்டிருக்கிறதென்பது இவனுக்கு ரொம்ப பிடித்தமான சங்கதியாகிவிட்டது. 'சைக்கிள் மாமா' வென்று கூப்பிடுகிற அளவுக்கு இவன் அந்த சைக்கிளுடன் ஒன்றியும் பந்தப்பட்டுமாயும் போனான்.

இப்போதெல்லாம் இவனுக்கு உலகத்தில் தோன்றியிருக்கிறதெதுவும் அனாவசியமில்லையென்று தோன்றிவிட்டது. உலகத்தில் உற்பத்திசெய்யப்பட்டிருக்கிறதெதுவும் பொருள்களாயினும் சாதனங்களாயினும், படைப்பினால் தோன்றிய உயிர்களாயினும் எல்லாம் அவசியம்தானென்றும், அவைகள் ஒவ்வொன்றும் ஓரொரு வித்தைகளை கத்துக்கொண்டிருக்கிறதே என்று அதிசயப்பட்டுமிருந்தபோதெல்லாம் சந்தோஷமாயிருந்தது. உலகினில் எத்தனை எத்தனை இன்பங்கள் கொட்டிக் கிடக்கின்றன என்பதை உணர்ந்தபோது விளையாட்டுத்தனமாகக் கூடத் தனக்கு இனி அது வேண்டாம் இது வேண்டாமென்று சிந்திப்பதைத் தவிர்த்திருந்தான். ரேடியோவும், டெலிவிஷனும் இன்னபிற நூதனமான சாதனங்களும் இவனுக்கு அவசியமாகிவிட்டன. விஞ்ஞான யுகத்தில் இன்னும் எத்தனை எத்தனை சாதனங்கள் உருவாகப் போகிறதோ? அவைகளெல்லாம் இவனுக்குத் தேவையாகப்படப் போகிறதோ—

இப்போது அப்பா எப்போதோ வாங்கித் தந்திருந்த அந்த ஆள் உயரக் கண்ணாடியில் தன்னை நிதானமாகப் பார்த்தான். பளபளவென்றிருந்த திரேகம் ஒடுங்கிப் போய் சுருங்கிப் போயிருந்தன. தனக்கு வயசாகிவிட்டது—தான் தாத்தாவாகப் போகிறோம்—எவ்வளவு சீக்கிரத்தில் காலங்கள் உருண்டோடிப் போய்விட்டன—தான் எப்படி சிந்தித்திருந்தவைகளிலிருந்து மாறினோம் என்பதெல்லாம் கற்பனையாய்ப் பட்டன. சின்ன வயசையும் அப்போதெல்லாம் நினைத்துக் கொண்டிருந்ததையெல்லாம் நினைக்க நினைக்க வருத்தமாகவும் சந்தோஷமாகவும்கூட இருந்தது. இப்போது ஆகப் போகிற தாத்தாவை வெறுக்க சித்தமாய் மனசு இல்லை. எப்போது தாத்தாவாகப் போகிறோமென்று மனசு அடித்துக் கொள்கிறது. அட மகனே! உன் பிள்ளை எப்போது என்னைத் தாத்தாவென்று கூப்பிடப் போகிறான்!

''அப்பா...'' உச்சி மயிரைக் குலுக்குகிற மாதிரி குரல். நினைப்புகளை உதறிவிட்டு மகனைப் பார்க்கிறா(ர்)ன்.

அவர் உயரத்துக்கு மகன்.

''அம்மா இந்த விதைகளை உங்ககிட்டே கொடுத்து கொல்லையில் ஊன்றச் சொன்னாங்கப்பா...ஒங்க கையால விதை போட்டா நன்றாக முளைக்குமாம்'' இவரிடம் விதைகளைக் கொடுத்துவிட்டு மாயமாய் மறைந்து போனான்.

கையில் விதைகள்—அதுவே விருட்சங்கள்—அவைகள் விருட்சங்களான பின்னும் மண்ணுக்குள் மடியப் போகிற வித்தைகள்.

இந்த விதை முளைத்த பிற்பாடு அது செடியாக இருக்கிற பருவத்தில் அதற்குத் தேவைப்படப் போவது காற்றும் வெளிச்சமும் சிறிது நீரும்—ஆனால் விருட்சங்களான பின் நிறைய நீர் — அண்டங் குலுங்குகிற மாதிரியான மழை—வெள்ளம். இன்னும் எத்தனை எத்தனை!

நிதானமாக கையிலிருந்த விதைகளை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் போனார். ★

# அர்த்தம் தேடி...

—கோ. வசந்தகுமாரன்

வாழ்க்கையின்
அர்த்தம் யாது?
பல் துலக்கி
குளித்து
உண்பது,
மினுமினுக்கி
அலுவலகம்
அடைவது.
சுவரில்
அறைந்த பந்தாய்
வீடு திரும்பி
வெற்றுக் கட்டிலில்
வீழ்வது!
நிலவு வந்ததும்
உறக்கத்தைத் துரத்தி
துணையோடு
அசைவது.
வாழ்க்கையின்
அர்த்தம் இவற்றிலா?
ஆறும் அறிவை
எழுப்பிக் கேட்டேன்.
சோம்பல் முறித்தபடியே
சுகம் தேடி அதுவும்
உறங்கிப் போனது!

# புதிய புத்தகங்கள்

## திருக்குறட் சுடர்

(கட்டுரைத் தொகுதி) ஆசிரியர்: மூதறிஞர் டாக்டர் வ. சுப மாணிக்கம், பி.எச்டி. டி.லிட். வெளியீடு: மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். கிடைக்குமிடம்: மணிவாசகர் நூலகம், 14, சுங்குராம் தெரு, பாரி முனை, சென்னை-600001. பக்கங்கள்: 160:12. விலை: ரூ. 12-50.

மூதறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளாக எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் வகைப் படுத்தி, ஓரினப் பொருளை ஒரு தலைப்பின் கீழ் நூலாக்கும் திட்டத்தில் வெளிவரும் பல நூல்களில் இதுவும் ஒன்று. 1330 குறட்பாக்கள் இரண்டடி என்றால் 2660 வரிகள் கொண்ட திருக்குறள் பற்றியும் விளக்கமாகவும் வெளி வந்துள்ள நூல்கள் 2000ஐ எட்டியிருக்கும். எனினும் திருக்குறளின் புதுமையும் பொலிவும் இன்றும் குறையவில்லை. இந்நூலாசிரியர் புலமைத் தமிழில் ஒரு தனி நடையில் திருக்குறள் வெளிப்படை, நடைமுறை அறங்கள், குறளணிகள், திருக்குறள் உத்திகள், வள்ளுவர் கண்ட கல்வித் திட்டம், வள்ளுவர் கண்ட உலகப் போக்கு, திருக்குறளும் தம்மபதமும், நிகழ்காலப் பார்வை என்ற பல்வேறு கண்ணோட்டங்களில் குறளை ஆராய்கிறார்.

தமிழ் மக்கள் திருக்குறளை உரைகளினின்றும் விடுதலைப்படுத்தி மூலக் குறள்களை நேரே தீண்டுவார்களாக! என்று கட்டளை விடுக்கிறார்.

நடைமுறை அறங்கள் என்ற தலைப்பிலும் நிகழ்காலப் பார்வை என்ற தலைப்பிலும் நூலாசிரியர் திருக்குறளின் காலமொன்றின்மை என்ற விரிவினை நெஞ்சில் ஊடுருவுவது போன்று விளக்கும் அழகு சிந்தனையில் ஆழ்ந்து தங்குகிறது. திருக்குறள் தேசிய மறையாகும் தனிப் பேறு பெற்றுள்ளது என்பதை நமது இந்திய அரசியல் சட்டத்தின் பகுதிகளை ஒப்புமைப்படுத்தி நிலைநாட்டும் போது நாம் மெய்ம்மறந்து அதை ஏற்கிறோம். நூலின் இறுதி தேசிய உணர்வோடு நாட்டுப் பற்றை வலியுறுத்தி முடியும்போது நம் நெஞ்சுவிம்முகிறது. ஆசிரியரை வாழ்த்துகிறது.

—திருமூல பாண்டியன்

## மதினிமார்கள் கதை

(சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: கோணங்கி. வெளியீடு: அன்னம் பிரைவேட் லிமிடெட், 2, சிவன்கோவில் தெற்குத் தெரு, சிவகங்கை-623 560. பக்கங்கள்: 100. விலை: ரூ. 8-00.

வித்தியாசமான நூல்களை வித்தியாசமான முறையில் வெளியிடுவதில் ஒரு விமரிசையான இடம் பெற்றுவிட்ட அன்னம் வெளியீடு இது. இம்முறை கரிசல் மணம் பக்கத்துக்குப் பக்கம் கும்மென்று மணந்து கொண்டு ஒரு சிறுகதைத் தொகுதி. அட்டை, அச்சு, அமைப்பு எல்லாம் நேர்த்தி என்று வழவழா கொழகொழா விமர்சகன் மாதிரியே நம்மையும் வாயெடுக்க வைக்கிற மாதிரி நினைவில் ஒரு ஜலதரங்கம் வாசிக்கும் அற்புதமான அட்டை. வண்ண ஜாலம் இல்லை. எனினும் அது செய்கிற ஜாலம்!

கோணங்கி கரிசல் தோண்டி கண்டெடுத்த வைரம். நினைவோவியம் தீட்டுவதில் அவர் நிபுணத்வம் 'பக்கங்கள் இருக்கிற ஒரு குறுக்கத்திலும் எத்தனை வகை தானியங்களுக்கு இடம் வைக்க முடியும்' என்று நிரூபணமாகியிருக்கிறது.

பதினோரு சிறுகதைகள் மட்டுமே கொண்ட இந்தத் தொகுதியில் முன்னுரைப் பக்கங்களை ஆபரேஷன் மேஜையாக்கியதோடு விடாமல் ஒரு சர்ஜரி லெக்சர் ஹால் ஆக்கி ஒவ்வொரு கதையையும் அறுத்துத் தள்ளி தம் சமத்காரத்தை நிரூபிக்கிற சாக்கில் கி. ராஜநாராயணன், பூமணி, பா. ஜெயப்பிரகாசம், வீர. வேலுச்சாமி, ச. தமிழ்ச்செல்வன் என்று ஒரு கரிசல் கூடாரத்தையே காதை முறுக்கும் வாத்தியார்த்தனத்திற்கு ஒதுக்கியிருக்கிறார் சா. ஜோதிவிநாயகம்.


கோணங்கி அப்படி அறிமுகப்படுத்தப் பட வேண்டிய சோட்டா பேர்வழியல்ல என்று தம் ஒவ்வொரு கதையிலும் நிரூபித்

திருக்கிறார். கவித்வம், சிறுகதை திருஷ்டி, (அங்கே இங்கே சறுக்கினாலும் ஒட்டுமொத்தத்தில்) வடிவப் பிரக்ஞை, நெஞ்சை மீட்டி வருடிவிடும் உணர்வு நிலைகள் இப்படி தமிழுக்கு கோணங்கி கொண்டு வந்திருப்பது ஒரு புதிய நம்பிக்கை. அருமையான தொகுதி.

—தூணக்கடவு பிரபாகர வர்மா

### அப்பா

(சிறுகதைத் தொகுப்பு) ஆசிரியர்: சுப்ரபாரதி மணியன். வெளியீடு: நர்மதா பதிப்பகம், 16, ராஜாபாதர் தெரு, சென்னை-17. விலை: ரூ 16.



சுப்ரபாரதிமணியன்

சுப்ரபாரதிமணியனின் 'அப்பா' சிறுகதைத் தொகுப்பு ஒரு புகைவண்டி. மொத்தம் பதினான்கு அறைகள். ஒவ்வொரு அறைக்குள்ளும் வெவ்வேறு மனிதர்கள். ஒரு அறையில் பார்த்த ஆண் அல்லது பெண்ணை மறு அறையில் பார்க்க முடியவில்லை. கடைசி அறையில் ஒரு பிணம் பயணம் செய்கிறது. அதிசயமாம், அது சட்டைப் பாக்கெட்டில் இரண்டு பயண டிக்கெட்டுகளை வைத்துக் கொண்டு அழுகிறது.

பொதுவாக சுப்ரபாரதிமணியனின் எழுத்தில் விவரணைகள் அதிகம்தான். ஆனால் வாழ்க்கையின் மீதான நேயத்துடனும், தேடலுடனும், வாத்ஸல்யத்துடனும், பொறுப்புடனும், அனுதாபத்துடனும், அசைபோட்டு சுகம் பார்த்த ரசிப்புடனும் இவரிடமிருந்து விவரணைகள் வெளிப்படும்போது, அது வாசகனுக்கு அலுப்பற்ற, இலகுவான, பயன்பாடான வாசிப்புத் தன்மையை அளிக்கிறது. வேறு சில எழுத்தாளர்களுக்கு உரையாடல்கள் பலம் என்றால், சுப்ரபாரதிமணியனின் பலம் விவரணைகள். ஆசிரியர் தனது சுயதம்பட்டமாக எந்தக் கதாபாத்திரத்தையும் பயன்படுத்தவில்லை என்பது பாராட்டத்தக்க அம்சம். ஒரு காலப் பெட்டகத்துக்குத் தேவையான முக்கிய விஷயங்களை ஒவ்வொரு கதையும் தன் போக்கில் கொண்டிருக்கிறது.

தொகுப்பின் கடைசிக் கதையான 'சாயம்' ஏறக்குறைய மரணத்தை ஸ்பரிசித்து விடுகிற கதை. மரண பீதியைச் சொல்லுகிற கதை. சாதாரணமாக மரணம்கூட மனிதனின் 'சாயம்' போகிற சமாச்சாரம்தானே. பிச்சைக்காரர்களையும், தொழுநோய் கும்பலையும், திடீரென உரக்கச் சிரிக்கும் பைத்தியத்தையும் பார்த்தபோதே கதாபாத்திரம் இறந்துவிடுகிறது. கடைசியில் வண்ணக் கலவை பீச்சியடிக்கப்பட்டவுடன், அழத் துவங்குவது அதுவல்ல.

'கை குலுக்க நிறைய சந்தர்ப்பங்கள்' பெண்மையின் மேல் செலுத்தப்படுகிற ஆண் ஆதிக்கத்தின் துவக்கத்தை யதார்த்தமாகவும், மனோதத்துவ ரீதியிலும் சொல்லுகிறது. ஆனால் அது ஆரம்பத்திலேயே இனங்காணப்பட்டு சமரசமாக்கப்படுகிறது. ஆண் ஆதிக்கவுணர்வை இவ்வளவு நுட்பமாகவும், அது செட்டு கொள்ளும் சமரசத்தை இத்தனை அழகுடனும் வேறெந்த சிறுகதையாவது சொல்லியிருக்கிறதா?

உறுத்தல் கதையில்—கோவில் திருவிழா சமயங்களில் கூட வரும் அமெச்சூர் நாடகக் குழு மஸ்தீபுகளும், நப்பாசைகளும், அவை மனிதரில் ஏற்படுத்தும் வேடிக்கைகளும் சிரஞ்சீவியானவை, ரசமானவை.

இத்தொகுப்பின் சிறுகதைகளின் நடுவே 'டர்பன்' கட்டிக்கொண்டு வயதும், தோரணையும், காம்பீர்யமும் காட்டி தனிநாயகமாய் விளங்குவது 'இன்னும் மீதமிருக்கிற பொழுதுகளில்' தான்.

'அப்பா' கதையில் வருகிற அப்பாவை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், முதலில் திருமங்கை ஆழ்வாரை நீங்கள் பாராட்டியிருக்க வேண்டும். கதை முடிவில் மகன் தன் தந்தையிடம் பேசும் அந்த வாக்கியங்கள் மனிதநேயம் மிக்கவை.

சூரியனின் வெளிச்சம் படாத எந்தத் தாவரமும், பொருளும், தேஜஸும், அழகும், உல்லாசமும் அற்றுப்போய் வெறுமையாகத் தானிருக்கும். 'வெளிச்சமற்றவை'யில் வரும் சாந்தாவும் வெளிச்சம் படாதவள்தான். சந்தோஷம், நிம்மதி, இவற்றின் வெளிச்சம் படாதவள்.

'வெடி' சிறுகதையில் மொழிப் போராட்ட விஷயங்கள் ஒட்டவில்லை. ஆறுவது விரலாகத் தோற்றமளிக்கிறது.

'கோடை' தருகிற விஷயம் ஏறக்குறைய 'டர்பன்' கதையின் ஜாதிதான், ஆனால் இரு கதைகளின் தளங்களும் வேறு. அழகுக் கலை நிபுணனும், அவன் தன் தொழில் நாசமும் 'டர்பன்' கதையில்.

'சில வேறு தினங்களில்' மனிதனின் அடி மனத்திலிருக்கும் அரக்கன், தானாக உணர்ந்து கொண்டோ அல்லது நாடியடங்கியோ மென்மையாக மாறும் பரிணமம், உஷ்ணத்துடனும், உக்கிரத்துடனும் சொல்லப்படுகிறது.

'அடையாள'த்தில் வருவது முச்சந்தியில் நிறுத்தப்பட்டு சவுக்கடி படுதல் போன்ற துக்கம்தான். இதை படைப்பாளன் உரத்த குரலில் சொல்லாமல், குறைந்த தொனியில் விவரிக்கையில் நன்றாக எடுபடுகிறது.

காதலையும், தியாகத்தையும், தாய்ப் பாசத்தையும், தந்தை நேசத்தையும் சரிவிகித மசாலாக்களுடன் கலந்து சமூக நாடகங்களை சிறுகதை, தொடர் கதை என முத்திரை குத்தி விற்பனை செய்யும் கூட்டத்திலிருந்து விலகி உயரமாகவும், பலமாகவும், தனது திசையைத் தெரிந்துகொண்டும் சுப்ரபாரதி மணியன் நடைபோடுகிறார்.

—தேவரசிகன்

**இந்த ராஜபாட்டையில்...**

(புதுக் கவிதை) ஆசிரியர்: கிருஷ்ணன் பாலா. வெளியீடு: வெளிச்சம் வெளியீடு. விற்பனை உரிமை: கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மன் ரோடு, சென்னை-17. பக்கங்கள்: 128. விலை: ரூ. 15.

'எண்ணங்கள் இலக்கிய நோக்கில் வெளியிடப்பட வேண்டும்; அவை சமுதாயத்தின் அழுக்கை அடையாளம் காட்ட வேண்டும்' என்ற கருத்தோடு 'இந்த ராஜபாட்டையில்' ஆசிரியர் நடைபோடுகிறார்.

அரசியல், சமூகம், காதல் என்று எல்லாக் கவிஞர்களும் தொடுகின்றவற்றைத்தான் இவரும் தொட்டிருக்கிறார் என்றாலும், ஒவ்வொரு கவிதையிலும் இவர் தன்னுடைய தனி முத்திரையைப் பளிச்சிடச் செய்கிறார்.

'பாரதமாதாவின் தோளிலும் இடுப்பிலும் இருந்து கொண்டு தொல்லை கொடுக்கும் குழந்தைகள்' என்று பாகிஸ்தான், பங்களாதேஷை உருவகிப்பது நிதர்சன உண்மை. 'மேய்ப்பன் இல்லாத ஆடுகள்' என்ற கவிதையில் ஒற்றுமையில்லா நாட்டு மக்களைக் கண்டு குமுறும் கவிஞரின் உள்ளுணர்வு நமக்குப் புரிகிறது.

## நம்பிக்கை

காய்ந்து தொங்கிற்று இதயம்
ஆனாலும்
சதைக்குள் ஓடுகிற நரம்புகளாய்
நம்பிக்கை —ஆர். சீனிவாசன்

'தாயே உனது சாம்ராஜ்யத்தில், அரை குறைகளே ஆதிக்கம் செலுத்துகின்றன...

ஆடையிலும் சரி; அறிவிலும் சரி' என்று சினிமாத் துறையை இடித்துரைப்பதில் நகைச்சுவை உணர்வும் வேதனை உணர்வும் வெளிப்படுகிறது.

'நட்பின் ஏக்கம்', 'பிரார்த்தனை' என்ற கவிதைகள் மனித மனங்களின் ஏமாற்றும் இயல்பினை, இயல்பாக எடுத்துரைக்கின்றன.

சுருங்கக் கூறின், புதுக் கவிதை என்ற பெயரில் புலம்புதல் இன்றி, சமுதாயத்திற்குத் தேவையான அனைத்துத் துறைகளையும் அலசிப் பார்க்கும் நன்முத்துக்கள் என்றே கூறலாம்.

கவிஞர் இறுதியில், 'நான் மறுபடியும் வைரங்களை வாரிக்கொண்டு வருவேன்' என்று கூறியுள்ளார். இவர் என்றும் வைரங்களையே தருவார் என்பதில் ஐயமில்லை.

—கோ. கோபாலகிருஷ்ணன்

**விடுதலைப் பாதையில் இந்தியா**

பகத்சிங்கின் நவஜவான் பாரத சபை பற்றிய அறிமுகம். தமிழில்: பாரதிப்ரியா. வெளியீடு: கார்க்கி நூலகம். விற்பனை உரிமை: பொன்னி 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20. விலை: ரூ. 4. பக்கங்கள்: 44.

இச்சிறு நூல், விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆயுதமேந்திய புரட்சியில் நம்பிக்கை வைத்து நாடறிந்த தேசபக்தனாக மரணத்தை முத்தமிட்ட பகத்சிங் ஒரு தனி நபர் அல்ல; நவஜவான் பாரத சபை என்ற இயக்கத்தைச் சார்ந்தவர்- அதைக் கட்டி எழுப்பியவர் என்று அறிமுகப்படுத்துகிறது. அவ்வியக்கம் பற்றிய ஒரு சுருக்கமான வரலாறாக சுவைபட எழுதப்பட்டுள்ள இந்நூலை விடுதலைப் போரில் பகத்சிங்கின் பங்கு என்ன அவர் எத்தனை தூரதிருஷ்டியுள்ளவராக விளங்கினார் என்று அறியவிரும்புவோர் தவற விடலாகாது.

—அர்ஜுன் ஆசார்யா

புதிய தொடர் கதை :

# "அக்கினிக் குஞ்சுகள்"

## 5. சரியான திசை நோக்கி...

ஆனாலும் ஏமாந்து போனது ராபினுக்குள் ஆழமாக ஒரு வடுவை ஏற்படுத்திவிட்டது. நடந்ததைக் கூட்டத்துக்கு எடுத்துச் சொல்லி எல்லோரையும் அமைதியாய் கலைந்து போகச் சொன்னான். ஈமச் சடங்குக்குச் செல்ல விருப்பம் உள்ளவர்களுக்கும், சடலத்தை எடுத்துச் செல்லவும் லேபர் ஆபீசரிடம் பேசி ஒரு லாரி வாங்கிக் கொடுத்தான். எல்லோரும் ஈமச் சடங்குக்குப் போய்விட்டுக் காலையில் திரும்பினர்.

மறுநாள் காலையில் எழுந்ததும் ராபினுக்குப் பதில் எழுத உட்கார்ந்தான் சுப்பிரமணியன். தனக்கு 'கல்ப்'ல் வேலை கிடைத்ததையும், பெரியப்பாவைத் தனித்து விட்டுவிட்டு தான் போக நேர்ந்ததையும் எழுதினான். ராபினோடு கடைசி நாளில் கதை பேசிய புல்மேட்டுக்கு சாயங்காலம் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். குளத்தூர் குளத்துக்குள் இருக்கும் அந்தப் புல்மேடு ராபினுக்கு மட்டுமல்ல சுப்பிரமணியனுக்கும் முக்கியமான இடமாயிற்று. எத்தனை ஆரம்பகால யூனியன் கூட்டங்கள் அங்கே நடந்தன. எத்தனை பௌர்ணமி இரவுகளை அந்தப் புல்தரையில் படுத்து கழித்திருக்கிறார்கள்!

ராபின் தான் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தான். சுடலைமணியின் சாவுக்கு மறுநாள் எப்படியும் யூனியன் அமைத்தே தீர வேண்டும் என்று உறுதியுடன் ராபின் ஒரு பத்துப் பேரை அழைத்திருந்தான். அந்தக் கூட்டத்தில் தான் நவநீதன் முதலாகக் கலந்து கொண்டான்.

முதல் நாளிலே நவநீதன் மேல் இனம் புரியா வெறுப்பு மண்டியது சுப்பிரமணியனுக்கு. நவநீதன் பெரிய கிரீடத்தைச் சுமப்பவன் போலத்தான் நடந்து கொள்வான்.

மோகனன்

யாரிடம் பேசினாலும் ஒரு அலட்சியம். உள்ளூர்க்காரனுக்குத்தான் முதலிடம் தரணும்யா என்பான். நீங்கள்லாம் பொழைக்க வந்த பயல்வதானய்யா என்று மூஞ்சியில் அடிப்பது மாதிரி பேசுவான். வார்த்தைக்கு வார்த்தை உள்ளூர்க்காரன், வெளியூர்க்காரன்னு பிரித்துத்தான் பேசுவான். அவனை இந்த வட்டத்துக்குள் இழுத்து வந்ததுக்காக ராபின் மட்டுமல்ல எல்லோருமே பின்னால் வருந்த வேண்டி வந்தது.

அன்றைய கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரியப்பா தலைவராகவும், ராபின் செயலாளராகவும், நவநீதன் உதவி தலைவராகவும், தாமஸ் பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். நவநீதன் தனக்கு தலைவர் அல்லது செயலாளர் பதவி பதவி தரப்படாதது குறித்து முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

நிர்வாகக் குழுவுக்கும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்துக்கு வராத ஆனால் ராபினிடம் உறுதி கூறியவர்களுக்கும் தாராளமாகப் பதவி வழங்கப்பட்டது. கூட்ட விவரங்களை ஒரு நோட்டில் எழுதி எல்லாத் தொழிலாளிகளிடமும் கையெழுத்து வாங்குவதென்றும், கையெழுத்திட்டவர்களை சங்க உறுப்பினர்களாக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தை ரிஜிஸ்டர் செய்வது பற்றிய வேலைகளை பெரியப்பாவும், ராபினும் கவனித்துக் கொண்டனர். அதற்கான செலவுகளை சங்க நிர்வாகிகள் சமமாகப் பகிர்ந்து கொண்டனர்.

சங்கத்துக்கு ஒரு கௌரவ தலைவரையும், ஆலோசகரையும் தேர்ந்தெடுப்பதில் பேச்சு திரும்பியது. தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளில் முன் அனுபவம் உள்ளவர் என்பதால் பெரியப்பா முதலில் தன் கருத்துக்களைக் கூறினார்: "நமக்கு ஒரு முதிர்ச்சியுள்ள தொழிற்சங்கத் தலைவர் ஆலோசகராக வேணும். நமக்கெல்லாம் தொழிற்சங்க அனு

பவம் கிடையாது. அதிலுள்ள நெளிவு சுளிவு தெரியாது. நாம் போராடலாம். ஒன்றுபட்டு ஒரு நிர்ப்பந்தத்தை முதலாளி மேல ஏற்படுத்தலாம். ஆனால் ஒரு செட்டில் மெண்ட் போடுறதுக்கும், நிர்வாகத் தரப் போட ஈடு கொடுத்து பேசுறதுக்கும் திறமை வேணும். பிரச்னைகளைத் திசை திருப்பவும், ரொம்பவும் சாதுர்யமாகப் பேசி மயக்கவும் நிர்வாகத் தரப்பில ஆட்கள் உண்டு. அவங்களுக்கு இதற்காக டிரைனிங் கூட உண்டு. அவங்க நினைச்சா பெரிய பெரிய வக்கீல் களோட ஆலோசனையைக் கூடப் பெறலாம். ஆனா நமக்கு அவ்வளவு செலவழிக்க முடியாது. மேலும் பணம் படைத்த முதலாளிகள் மாவட்ட நிர்வாகிகள், போலீஸ் துறை, தொழிலாளர் நலத் துறை எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிடுவாங்க. அல்லது அவங்க மேல ஆதிக்கம் செலுத்துவாங்க ஒவ்வொரு சட்டத்தையும் அவங்களுக்கு சாதகமா திருப்புற திறமையும் உண்டு. தவறான திசைக்கு நம்மளை திசை திருப்பவும்கூட அவங்களால முடியும். நிர்வாகத்தோட செயல் முறையும் பேச்சும் நம்மை வன்முறையில ஈடுபட வைக்கும். நம்ம பேச்சும் செயலும் வன்முறையை நோக்கிப் போனால் நம்ம மேல கேஸ் போட்டு, போலீஸ், கோர்ட்டுன்னு அலைச்சி பணிய வைக்கிறது சுலபம். இந்த ஆபத்துக்களையெல்லாம் கடக்கணும்ன்னா எதுக்கும் கலங்காத ஒரு தலைவன் வேணும். அந்தத் தலைவனை நாம எப்பவேணும்ன்னாலும் போய் சந்திக்கிற மாதிரியும், அவர் நமக்காக எந்த கணமும் துண்டை உதறி தோள்ல போட்டுட்டு கிளம்பி நம்மோட வரத் தயாராயிருக்கிறவராயும் இருக்கணும். அவரால நமக்கு அதிக செலவினங்கள் இருக்கக் கூடாது. நம்மோட கஷ்டங்களைத் தனக்குச் சாதகமாக்கி ஆதாயம் தேடுகிறவராயும் இருக்கக் கூடாது.

இப்படி ஒரு தலைவன்தான் முக்கியம். இந்தக் காலத்தில கட்சி சார்பு இல்லாத யாரையும் நம்மால தேடிக் கண்டுபிடிக்க முடியாது. நமக்குக் கட்சி எதுவும் முக்கியமில்லை நம்முடைய ஒரே நோக்கம் போராட்டம் மூலமோ பயமுறுத்தல் மூலமோ நமக்கு நியாயமா கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெறணும். சின்னச் சின்னப் பிரச்னைகளைப் பேசித் தீத்துக்கணும். நமக்கு ஒரே ஒரு எதிரி தான் உண்டு. அதுதான் முதலாளி. மத்தபடி நமக்குள்ள வேற்றுமை இருக்கக் கூடாது.''

பெரியப்பா பேசி முடிக்கவும் நவநீதன் சொன்னான்: ''தலைவர் லோக்கல் ஆளாத்தான் இருக்கணும்.''

பெரியப்பா மீண்டும் அதே பொறுமையுடன் விளக்கினார்: ''உள்ளூர் வெளியூர்ன்னு நமக்கு வேறுபாடு கூடாது. நமக்கு வேண்டியது தொழிற்சங்க அனுபவமுள்ள, சுயநல மற்ற ஒரு தலைவன் தான்.''

''கேசவன் இருக்கார். இங்க உப்பளம் ஆரம்பிச்சதிலேயிருந்து அவர்தான் தொழிலாளர் தலைவர். அவரைத்தான் நமக்குத் தலைவராக்கணும்.''

''உப்பளத் தொழிலாளர் பிரச்னை வேற. நம்மோடது வேற. அங்கே பல பிரச்னைகள் உணர்ச்சி பூர்வமாக தீர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கே முதலாளியும் தொழிலாளியும் ஒரே ஊர்க்காரர்கள். ஆனால் நம்முடையது சிக்கல்கள் நிறைந்தது. எங்கோ இருக்கிற முதலாளி. இங்கேயிருந்து எனக்கு அதிகாரம் இல்லை, அதிகாரம் இல்லைன்னு சொல்லிக் கொண்டே வரம்பு இல்லாத அதிகாரங்களை பிரயோகித்துக் கொண்டிருக்கும் ஜி.எம்... இன்னும்...'' இதையெல்லாம் கேட்கும் நிலையில் இல்லை நவநீதன்.

''கேசவன் அண்ணனுக்கு ஜி.எம். கிட்ட ரொம்ப செல்வாக்கு உண்டு. அதை வெச்சி நாம சங்கத்துப் பிரச்னைகளைத் தீர்த்துக்கலாம். தொழிற்சாலை ஆரம்பிச்ச காலத்தில அதுக்கு நிலம் ஆர்ஜிதம் பண்ணிக் கொடுத்தது கூட கேசவன் அண்ணன் தான்.''

பெரியப்பா மீண்டும் அவனுக்கு விளக்கினார்: ''தனிப்பட்ட உறவுகள் மூலம் கெஞ்சியோ, நயந்து பேசியோ வாங்கப்படும் சலுகைகள் எந்நேரமும் பாதிக்கப்படலாம். போராடாம பெறுத எந்த உரிமையும் நிலைக்காது. மேலும் உங்க கேசவன் அண்ணன் வாரத்துக்கு நாலு தடவை ஜி எம்.மைத் தனியா சந்தித்துப் பேசிட்டுப் போறார். இந்த மாதிரி தலைவர்கள் ஆபத்தானவர்கள். அவர்கள் சங்கத்தை ஒருநாள் அடகு வைத்து விடுவார்கள்.''

''நீங்க ஒரு கம்யூனிஸ்ட். அதனாலதான் எங்க கேசவன் அண்ணனைக் குறைச்சி பேசுறீங்க'' என்றான் நவநீதன். 'நீங்க ஒரு கம்யூனிஸ்ட்' என்ற சொல்லை ஒரு வசவைப் போல உபயோகித்தான்.

உப்பளத் தொழிலாளர்கள் அதிகமுள்ள அந்த ஏரியா காங்கிரஸ்காரர்களின் கையில் உள்ளது. தொழிலாளர் தலைவனும், உப்பளச் சொந்தக்காரனும் காங்கிரஸ்காரர்களே. இருவரும் ரொம்ப கவனத்துடன் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கம் அங்கே ஊடுருவாமல் பார்த்துக் கொண்டனர். அவர்களின் கம்யூனிஸ எதிர்ப்புணர்வுக்கு ஒரு உதாரணம்கூட பெரியப்பா சொன்னார், ஒன்றிரண்டு நாள் கழித்து.

பொதுத் தேர்தலையொட்டி உள்ளூர் கம்யூனிஸ்ட்காரன் ஒருவன் துணிச்சலுடன் சிகப்

புக் கொடியைத் தன் வீட்டு முற்றத்தில் இருந்த மரத்தில் கட்டினான். ஊரில் ஏற்றப் பட்ட முதல் கம்யூனிஸ்ட் கொடி அது. ஊரில் எல்லோருக்கும் அதைப் பார்க்கப் பார்க்க எரிச்சல். ஆனால் என்ன பண்ணுவதென்று தெரியவில்லை. மத்தியானம் ஆயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக மாலைச் சூரியன் மேற்கில் நகர்ந்தது. மரத்தில் கட்டப்பட்ட கொடி நிழலும் கிழக்கே நகர்ந்தது. கீழ் வீட்டுக் கூரையில் விழுந்தது. உடனே கீழ் வீட்டுக்காரன் சண்டைக்குத் தயாரானான். அந்தக் கொடியின் நிழல்கூட என் வீட்டில் படக் கூடாதென்பது கீழ் வீட்டுக்காரன் வாதம். அப்புறம் எல்லாரும் சேர்ந்து மத்தியஸ்தம் பண்ணி கொடியை அவிழ்த்தார்கள். அப்படிப்பட்ட ஊர் இது என்றார்.

அன்று கேசவனைத் தவிர வேறு யாரையும் தலைவராக ஏற்க முடியாது என்று வாதம் பண்ணிக் கொண்டிருந்த நவநீதனை தாமஸ் தன் முரட்டுக் குரலில் அடக்கினான். ''இந்தா பாரு நவநீதா! உங்க கேசவனை நம்ம யூனியனுக்கு தலைவரா போட முடியாது அத்தோட பேச்சை விடு.''

அப்புறம் ஒவ்வொருவரும் அவர்களுக்குப் பிடித்த உள்ளூர்—வெளியூர் தலைவர்களின் பெயர்களைச் சொன்னார்கள். எதுவும் திருப்தியாகவில்லை.

கடைசியில் பெரியப்பா அவரின் தெரிவினைச் சொன்னார். ''திருநெல்வேலியில கோபாலன்னு ஒருத்தர் இருக்கார். அனுபவமுள்ள தொழிற்சங்கவாதி. ரெண்டு தரம் எம்பியாக இருந்திருக்கார். பல்வேறு மட்டங்கள்ல தொடர்பு உள்ளவர். அவர் கம்யூனிஸ்ட்தான். ஆனா நாம கம்யூனிஸ்ட் ஆகவோ, நம்ம யூனியன் கட்சியூனியனாகவோ இருக்கணும்ன்னு இல்ல.''

எல்லாருமே பெரியப்பாவின் தெரிவை ஏற்றுக் கொண்டார்கள், நவநீதனைத் தவிர்த்து. கணிசமான அளவு உறுப்பினர்களைச் சேர்த்த பின், யூனியன் பதிவு செய்த பின்னர் திரு. கோபாலனை அணுகுவது என்று தீர்மானித்தனர்.

அன்று சாயங்காலம் ஷிப்ட் முடிந்ததும் சுப்பிரமணியன் அண்ணாச்சி வீட்டுக்கு பஸ் ஏறினான். சமாதானபுரத்தில் இறங்கி வீட்டைத் தேடிப் போனபோது விளக்கேற்றும் நேரமாகிவிட்டது. இதற்கு முன் எத்தனையோ தரம் ராபினுடனும், பெரியப்பாவுடனும் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறான். இப்போது தனியாக—அதுவும் அண்ணாச்சியின் சாவுக்குப் பின்—உள் நுழைய கூச்சமாகத்தானிருந்தது.

பெல்லை அடித்தபோது அண்ணாச்சியின் மனைவி வந்து கதவைத் திறந்தார்கள். ''சுப்பிரமணியம் தம்பியா! வாங்க வாங்க!''

அந்த முகத்தில் கவலையின் ரேகைகளும், எதிர்காலக் கவலைகளும் தேங்கிக் கிடந்தன. அண்ணாச்சி செத்தபோது இவர்களுக்கென்று சொத்து எதுவும் விட்டுச் செல்லவில்லை, பையன் அப்போது இஞ்சினியரிங் காலேஜில் இரண்டாம் ஆண்டு படித்தான். பெண் பி. எஸ்ஸி. ஃபைனல் படித்தாள். அவர்கள் படிப்புச் செலவுக்கும், அன்றாடச் சாப்பாட்டுக்கும் ரொம்பவும் திண்டாடிப் போனார்கள். அப்போது ராபின். தாமஸ், ரகுராம் எல்லோரும் ஆளுக்கு ஒரு தொகை மாதாமாதம் கொடுத்தார்கள். இவன் கூட தன் பங்குக்கு கொஞ்சம் கொடுத்தான். அந்தம்மா ரொம்பவும் தயக்கத்துக்குப் பின்தான் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டது. அந்த வீட்டில் அவர்கள் எல்லாம் உரிமை உள்ள குழந்தைகள் போலத்தானிருந்தார்கள். அண்ணாச்சி உயிருடனிருந்தபோது அந்த அன்பினால்தான். இப்போதுகூட அண்ணாச்சியின் மகள் கல்யாணத்துக்கு உதவட்டும் என்று ஒரு ஐயாயிரம் ரூபா அனுப்பி வைத்தான் ராபின். அந்தப் பெண்ணுக்குச் சரியான வரன் இன்னும் திகையவில்லை. பையன் கூட இஞ்சினியரிங் படித்துவிட்டு வடக்கே எங்கோ வேலையில் இருக்கிறான். இப்போது கொஞ்சம் நன்றாகவே குடும்பம் ஓடுகிறது.

இரவு சாப்பாட்டுக்கு உட்கார்ந்தபோது அவன் தன் திட்டத்தைச் சொன்னான்: ''நான் குவைத்துக்கு வேலைக்குப் போறேன். போறதுக்கு முன்னாடி உங்களை ஒரு தரம் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''அப்படியா! எப்பவும் நினைச்சா வந்து எட்டிப் பாத்துக்குவீங்க. தாமஸ் தம்பிகூட ரெண்டு மாசம் முந்தி வந்து பாத்தது. கஷ்டப்பட்ட நேரத்தில கூடமாட ஒத்தாசை பண்ணுனீங்க. இப்ப சட்டுன்னு ஆளுக்கொரு திசையா போவ ஆரம்பிச்சிட்டிய!'' கொஞ்ச நேர மௌனத்துக்குப் பின் பேச்சு தொடர்ந்தது.

''அவியளும் எத்தனையோ சங்கத்துக்குத் தலைவராயிருந்தாவ. ஒரு இடத்திலயும் இப்படிப் பழகல்ல. அந்தப் பழக்கம் எல்லாம் ஆபீசோட போச்சு. உங்க கெமிக்கல் ஆளுக மேல அவியளுக்கும் ஒரு அன்பு வந்துட்டுது. கடைசி நேரத்தில அவியளுக்கு உங்க நினைப்புதான். ராபின் தம்பி மேல பெத்த பிள்ளை மாதிரி பாசம் வச்சிருந்தாவ. நீங்கல்லாம் தாய், பிள்ளை மாதிரி பழகிட்டிய. எங்களுக்கும் அவசரத்துக்கு உதவி பண்ண யார் இருக்கா உங்களைத் தவிர?''

அந்த வீட்டுப் படி இறங்கினபோது எத்

தனையோ ஆயிரம் சிந்தனைகளும் உணர்ச்சிகளும் உடலெங்கும் ஓடின. வாசலைத் தாண்டியபோது உள்ளிருந்து குரல் கேட்டது. ''தம்பி எங்க போனாலும் பாப்பா கல்யாணத்துக்கு வந்திடணும்.''

''கண்டிப்பா வரேன். நீங்க மட்டும் பத்து இருபது நாளுக்கு முன்னால தகவல் அனுப்பிடுங்க.''

அண்ணாச்சிதான் அவர்களுக்கு குரு. பெரியப்பாதான் அவர்களை அண்ணாச்சியிடம் அழைத்துப் போனார். முதல் நாள் அவனும் ராபினும் பெரியப்பாவுடன் போனார்கள். மிஸ்டர் கோபாலன் என்று உருவகப்படுத்திக் கொண்டும், போகும் வழியெல்லாம் பெரியப்பா எடுத்துச் சொன்னவற்றையும் மனத்தில் பதித்துக் கொண்டும் அவரைப் பார்த்த போது மனத்தில் கட்டி வைத்திருந்த உருவம் சிதைந்து போனது. அவர் ஒல்லியாய் உயரமாய் இருந்தார். கதர் சட்டை போட்டிருந்தார். தூய வெண்மையான அவர் சட்டையில் சில கிழிசல்கள் கூட இருந்தன. அவர்கள் உள்ளே நுழைந்தபோது அவர் யாருடனோ தணிந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார். காலடி சப்தம் கேட்டு நிமிர்ந்தவர் பேச்சை நிறுத்திவிட்டு மென்மையான குரலில், ''வாங்கோ! உக்காருங்கோ!''

தரையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.

''ஒரு நிமிஷம் இருங்க. இவங்களை அனுப்பிட்டு வரேன்.'' ரொம்பவும் நாசூக்காயிருந்தது அவரின் பேச்சுகள். ஒரு பந்தா இல்லை. சக மனிதனை அவமானப்படுத்தும் அகங்காரமில்லை அவர் குரலில்.

அவரிடம் பேச ஆரம்பித்தபோது அவரை எப்படி அழைப்பது என்று ஒரு தயக்கம். 'தலைவரே' என்று அழைப்பதா? 'சார்' என்று அழைப்பதா? இரண்டு வார்த்தைகளுமே அந்த அன்புருவுக்கு பொருந்தி வராததாக இருந்தது. அவரே சொன்னார்: ''சும்மா அண்ணாச்சின்னே சொல்லுங்க.''

அன்றிலிருந்து அவரை அண்ணாச்சி என்று அழைப்பதிலே சந்தோஷம் கொண்டனர். அண்ணாச்சியின் முகத்தில் அறிவொளி வீசும். எப்பவும் அன்பு கனியும் கண்கள்; புன்னகை தவழும் இதழ்கள். அண்ணாச்சி சுடுசொல் பேசிக் கேட்டதில்லை. கேட்கிறவனையும் சம அந்தஸ்தில் வைத்துப் பேசுவார். புரியாததை விளக்கும்போதுகூட கேட்பவனுக்குத் தெரிந்த விஷயத்தையே தான் வேறு ஒரு கோணத்திலிருந்து விவரிப்பதுபோல் சொல்லுவார். அவரிடம் பேசிக் கொண்டிருந்தாலே சந்தோஷம். அவருடனிருந்தாலே ஒரு தெம்பு வரும்.

ராபின் தொழிற்சாலையின் ஆரம்பகால வரலாறுகளைக் கூறினான். தனக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களையும் கோவையாக எடுத்துச் சொன்னான். எந்தவிதமான விதிமுறைகளையும் பின்பற்றாமல் செய்யப்பட்ட வேலை நீக்கங்களையும், தொழிலாளிகள் மேல் உள்ள அடக்குமுறை பற்றியும் சொன்னான். நிர்வாகத்திற்கு உளவு சொல்வதினால் சம்பாதித்த செல்வாக்கினால் சில சுயநல கும்பல் எல்லோரையும் மிரட்டுவதையும், சரியான பாதுகாப்பு சாதனங்களின்றி பல விபத்துக்கள் ஏற்பட்டதையும், சுடலைமணியின் மரணத்தையும் அதற்குப் பின் உள்ள சம்பவத்தையும் விரிவாகச் சொன்னான். தற்சமயம் யூனியன் பதிவு செய்யப்பட்டு சுமார் முந்நூறு பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டதையும் சொன்னான்.

அண்ணாச்சி அத்தனையையும் பொறுமையுடன் கேட்டார். இடையிடையே ''ஆ! அப்படியா!'' ''பரவால்லியே!'' ''சே! சே! நீங்க அப்படிப் பண்ணியிருக்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

மே மாதம் 1-ந் தேதி தொழிற்சாலை அருகில் கொடியேற்றி வெளிப்படையாக யூனியன் இயக்கத்தை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று அண்ணாச்சி ஆலோசனை கூறினார். கொடியேற்றத்துக்கு வரும்படி ராபின் அழைத்ததை ஒத்துக் கொண்டார்.

எல்லோரும் பிரிந்து செல்லும்போது பொதுவாக யூனியனுக்கு நிர்வாகிகளாய் இருப்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவைகள் பற்றி சொன்னார்: ''பொதுவாக யூனியன் நிர்வாகிகளுக்கு பொறுமை நிறைய வேணும். சகிப்புத்தன்மை வேணும். பத்துப் பேர் சம்பந்தப்பட்ட இடத்தில் பத்து மாதிரி ஆளுங்க இருப்பாங்க. யூனியனும் வேணும், போராட்டமும் வேணும், முதலாளி குடுக்கிறது போதும்னு ஒருத்தர் நினைக்கலாம். நாம ஏன் கஷ்டப்படணும், எவனாவது சண்டை போட்டு வாங்கட்டும்; நமக்கு இல்லேன்னா சொல்லிடுவான் என்று சிலர் நினைக்கலாம். அதிகாரிகளுக்கு ரொம்பவும் பயந்தவன் இருப்பான். அவனுக்கு யூனியன்னா அதிகாரிகளைவிட அதிகம் பயம் இருக்கும். தான் பெரிய தலைவர்னு நெனைப்பில பதவி மட்டும் தேடி சிலர் யூனியனுக்கு வரலாம். உண்மையிலே கஷ்டப்பட்டு, யூனியனுக்காக உழைப்பவனுக்கு எதிராய் அவதூறு கிளப்பலாம். இதைவிடவும் பெரியதாக நிர்வாகத்தினால் பழிவாங்கப்படலாம். அடிக்கடி தொந்தரவுக்கு உள்ளாகி மன நிம்மதியை இழக்க வேண்டி வரலாம். எல்லாவற்றையும் யூனியன் தலைவர் பொறுமையா சகிச்சிக்கணும். எந்தச் சூழலிலும் மனச் சமநிலையை

இழக்கக் கூடாது. மேலும் சக தொழிலாளிகள் சுயநல நோக்கம் கருதி யூனியனுக்கு எதிராக வேலே செய்யலாம். அப்ப அவங்க மேல ஆத்திரப்படக் கூடாது. தனிமனித விரோதம் கொள்ளக் கூடாது. எவ்வளவு மோசமானவனுயிருந்தாகூட அவன் நம்ம சகோதர தொழிலாளின்னு நினைக்கணும். நமக்கு ஒரே ஒரு எதிரிதான் உண்டு அது முதலாளியும், அவனோட அடிவருடி நிர்வாகமும்தான். நம்மோட பலத்தை எல்லாம் நம்ம எதிரி மேலதான் பிரயோகிக்கணும். அப்புறம் இன்னொரு முக்கியமான சமாச்சாரம் உண்டு. பொதுநிதியை வச்சி செலவளிக்கிறவங்க அதுக்கு சரியான கணக்கு வச்சி ஜாக்கிரதையாக செலவளிக்கணும். நிறைய யூனியன் சீரழிஞ்சி போனதுக்கு தவறான முறையில் கையாளப்பட்ட நிதி வசதிகள்தான் காரணம்.''

அன்று அண்ணச்சியிடமிருந்து விடை பெற்று வீட்டுக்குத் திரும்பியபோது எல்லோர் மனங்களிலும் அண்ணச்சிதான் நிறைந்திருந்தார்.

(தொடரும்)

---

# இரண்டு கவிதைகள்

ஆர். சூடாமணி

## முரண்

கைம்பெண்ணின் கண்ணீர்
ஆறுதல் பெறவென்று
கோவிலுக்கு அவளே அனுப்பினர்கள்.
அங்கே—
தேவி அலங்காரியாய்
பூவும் புத்தாடையுமாய்
தேவனுடன் இணைந்து நின்றுள்.

## இன்னொரு நான்

சாத்வீகம் என்றுதான் என்னே
எண்ணிக்கொண்டிருக்கிறேன்.
வன்முறை என்று கேட்டாலே
மனம் பதறி நடுங்குவேன்.
எங்கோ கொலே நடந்தால்
இரவெல்லாம் தூங்க மாட்டேன்.
யாரோ துன்புற்றுல்
என் கண்ணில் நீர் வடிப்பேன்.
அஹிம்சாவாதி என்றுதான் என்னே
எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

நொய்ய்ய்...
காதுக்குள் பாட்டுப் பாடி
சுற்றிச் சுற்றிக் கொத்தும்
கொசுக் கூட்டம்.
காலில் கையில் முகத்தில் கழுத்தில்
சுரீர் சுரீர் சுரீர்...
விரட்ட விரட்டப் பறந்து போய்
திரும்பி வந்து
வட்டமிட்டு ரீங்கரித்து
சுரீர்!
சுவாரஸ்யமாய்ப் புத்தகம் படிக்கையிலே
சுரீர் !
கழுத்துப் போர்வையை நீக்கி
பக்கம் திரும்பக் கை நீட்டினுல்
சுரீர்! சுரீர்!
கொசுவா தேளா?
ஓடோமாஸ் சுருள்வத்தி பேகான் ஸ்ப்ரே
எதற்கும் மசியாத
கூர் ஊசிக் கூட்டம்.

ஆத்திரம் பீரிவர
எழுந்து உட்காருகிறேன்.
போர்வையைக் களேகிறேன்.
புத்தகம் எடுக்கிறேன்.
—படிக்கவல்ல.
இங்குமங்கும் பார்வையோட்டி
ரீங்காரக் கறுப்புச் சுரீர்
அருகில் வர, உதடு கடித்து
ஆவேசமாய்க் கையுயர்த்தி
வலிமையெல்லாம் ஒன்று சேர்த்துப்
போடுகிறேன் ஓர் அடி
புத்தகத்தால்.
செத்து விழும் கொசுவை நோக்க
உள்ளே ஒரு
கொலேகார மகிழ்ச்சி.

அஹிம்சாவாதி என்றுதான் என்னே
எண்ணிக்கொண்டிருந்தேன்...

சிறுகதை:

# ஈல்லே!

விட்டல்ராவ்

இதற்குள் காத்தமுத்து நிறையவே ஆங்கில வார்த்தைகளைச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். இலக்கணம் தவிர்த்த அவனுடைய ஆங்கிலப் பேச்சு அவன் பேசும் மாநகர் தமிழைக் காட்டிலும் பொறுக்கும்படியாகவே இருந்தது. கன்னிமரா ஹோட்டல் வாசலில் தன் சைக்கிள் ரிக்ஷாவை நிறுத்தத் தொடங்கினதிலிருந்தே அவன் இந்த இரு மொழித் திட்டத்தில் இறங்கிவிட்டான்.

அன்றும், ஒரு அயல்நாட்டுப் பயணிகள் கூட்டம் அவனுடைய பார்வையில் அகப்பட்டது. அவர்களும் ஒன்று சேர்ந்து நடக்காமல் நன்நாலாய, மும்மூன்றாய், இரண்டிரண்டாய்தான் ஹோட்டலைவிட்டு வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தனர். அப்படியும் அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரி மனப்பாங்கிலிருப்பதாக சட்டென்று எடுத்துக் கொண்டுவிட முடியாது. சிலர் டூரிஸம் டெவலப்மெண்டு பஸ்ஸில் ஏறி மாமல்லபுரம் செல்லக் கூடியவர்களாயிருக்கலாம். சிலர் கடைத்தெருவை மட்டும் சுற்றிப் பார்க்கக் கூடியவர்களாயிருக்கலாம். சிலர் கடற்கரைக்கு மட்டுமே சென்று சூரியக் குளியலை மேற்கொள்பவர்களாயிருக்கலாம். இவர்கள் அவனுக்குச் சரிபடாது. இவர்களால் காசுக்குப் புண்ணியமில்லை. சிலர் ஹிப்பித் தேர்ற்றமுடைய இளைஞர்களாயிருந்தார்கள். அவர்களைக் கண்டதுமே காத்தமுத்து அருவருத்து தூர விலகிவிடுபவன். அவர்களிடம் காசு பெயராது என்பது இருக்கட்டும், கஞ்சா வாங்கிக் கொடுக்கும்படி இவனை உயிரை எடுத்திருக்கிறார்கள்.

அவனுடைய வாடிக்கைகள் கண்ணியமாயிருக்க வேண்டும். தாராளமாயிருக்க வேண்டும். ஏதோ சவாரி ஏறினார்கள், நாமும் நான்கைந்து இடங்களையே திரும்பத் திரும்பச் சுற்றி வந்து காட்டி கணக்கு பண்ணினோம் என்றிருக்க வேண்டும்.

—ஹார்பர் சார், சைனா பஜார் சார், ஹைகோர்ட் சார்—என்று சொல்லி சுட்டிக் காட்டினபடியே எம்பூசி வழியே திரும்பிச் சென்று காட்டினதையே வேறு ஏதாவது பெயரில் அழைத்துக் காட்டிவிடுவதுண்டு. கரிய தன் சப்பை வயிற்றைப் பொத் பொத் தென்று இரண்டு அறை அறைந்து காட்டி கூடுதல காசு கறந்துவிடுவான்.

அந்த வகையில் தன் வழியில் படிந்து விடும்படியாய் அவர்களில் யாரார் இருக்கிறார்கள் என்று கூர்ந்து கவனித்து கடைசியில் பொறுக்கி எடுத்து விடுவான்.

அந்த வயதான ஜோடியை இன்று குறி வைத்துவிட்டான். அந்த மேனாட்டு ஜோடி ஆளுக்கொன்றாக உயர்ந்த ரக காமிராவை வைத்துக் கொண்டு விளையாடத் தொடங்கியிருந்தனர். பெரிய பெரிய சினிமா பானர்கள், அண்ணாசாலை நெரிசலையெல்லாம் படம் எடுத்துக்கொண்டே நடந்து — மற்றவர்களை விட்டு தனித்தே நடந்து செல்லும் ஜோடியை நெருங்கினான் —மியூசியம் சார், ஆர்ட் சார், மெரீனா பீச் சார், ஷகடு சார்—என்றான்.

அவர்களிருவருமே, "நோ..... நோ..." என்று இவனை ஒதுக்கிவிட்டுத் தம் காரியத்தில் கண்ணாயிருந்தனர்.

மீண்டும் இவன் நச்சரித்தான். அப்போது இரண்டு மூன்று பிச்சைக்கார சிறுவர்கள் வெள்ளைக்காரர்களைக் கண்ட மாத்திரத்தில் ஓடிவந்து சூழ்ந்து கொண்டனர். —தொரெ ...தொரெ...என்று கத்தி கையை அவர்கள் மீது உயராத குறையாய் நீட்டினபடியே தொடர்ந்தனர். பிறகு ஆளாளுக்கு துரை—துரைச்சானிகளைத் தொட்டுத் தொட்டு கெஞ்சி யாசித்தபடியே விடாமல்தொடர்ந்து வந்தனர். ஒருவன் காலைக் காலைப் பிடித்துத் தொட்டுக் கும்பிட்டு யாசித்தபடியிருந்தான். ஈயோட்டுவது போல ஓட்டிக் கொண்டிருந்தாள் துரைச்சானி.

அப்போது அவர்கள் செயலிழந்தார்

போல கத்தளித்தவாறு அங்குமிங்கும் பார்க்கத் தொடங்கிவிட்டனர். யாராவது உதவிக்குத் தேவைப்பட்டார்கள், காத்தமுத்துவின் ரிக்ஷா ஒரு ரதம் போல பக்கவாட்டில் உராய்வது மாதிரி வந்து நின்றது. குரலை முறுக்கி ஒரு அதட்டல் போட்டான். "இல்லே...போடா......போங்கடா ஒண்ணுமில்லே."

அந்தப் பிச்சைக்காரர்கள் நம்பிக்கை யிழக்காமல் அந்த வெள்ளைக்காரத் தம்பதிகளைத் தொட்டு, கால்களைப் பிடித்து கெஞ்சிக் கொண்டேயிருந்தனர்.

"இல்லே...போடா .போடா...இல்லே,"

சிறுவர்கள் சோர்வடைந்து பின்தங்கிப் போனார்கள். என்ன தோன்றியதோ அந்தத் தம்பதி ரிக்ஷாவில் ஏறிக்கொண்டுவிட்டது.

"வாண்ட் டாப்?" என்று கேட்டுவிட்டு ரிக்ஷாவின் கான்வாஸ் டாப்பை விரிக்கப் போனவனைத் தொட்டுச் சொன்னாள் துரைச்சானி.

"ஈல்லே...ஈல்லே...டாப் ஈல்லே..."

ஓகோ, தமிழ் வந்துவிட்டதே இவளுக்கு என்று புரிந்துகொண்ட வியப்பான மகிழ்ச்சியோடு அவர்களோடு ஒத்துழைத்தான்.

அப்புறமும் அவர்களை நெருங்கி வந்த பிச்சைக்காரர்களை அந்த ஐரோப்பியர்களே உரத்த குரலில், "ஈல்லே...ஈல்லே..." என்று சொல்லிச் சொல்லியே விரட்டிக் கொண்டிருந்தார்கள். காத்தமுத்துவும் போன இடத்திற்கே காட்டின இடங்களையே வேறு வழியில், வேறு திசையில் சுற்றிச் சுற்றி வந்து காட்டிவிட்டான்.

பிறகுதான் பூம்புகார் சிறப்பங்காடிக்குப் போக வேண்டுமென்றார்கள். வாசலில் இறக்கிவிட்டுவிட்டு இவன் வெளியிலேயே நின்றுவிட்டான். அவர்கள் உள்ளே போய் ஒரு கால் மணி நேரங்கழித்து துரைச்சானி வேகமாய் வந்து அவனையும் தன்னோடு உள்ளே வரச் சொல்லி அழைத்துப் போனாள். துரை மெய்மறந்து போய் அந்த சுட்ட செம்மண் குதிரையின் முன் நின்றிருந்தார். அந்த அய்யனார் குதிரை சுட்ட மண்ணுருவம். அதன் கழுத்தில் கட்டிவிடப்பட்டிருந்த விலைசீட்டு காத்தமுத்துவை வாயைப் பிளக்க வைத்தது. ஒன்பது நூறு ரூபாய்கள் சொச்சம். அதை அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். அருமையாக பாக் செய்யப்பட்ட மண் குதிரையை அவன் தூக்கிக் கொண்டு வந்து ரிக்ஷாவில் வைத்தான்.

ஓட்டலுக்கே திரும்பச் சொன்னார்கள். இவன் பேசாமல் வண்டியைச் செலுத்தினான். அந்தக் குதிரை...அவனுடைய எண்ணத்தைப்போட்டு அலைக்கழித்தது. அதன் விலை மதிப்பு அவனை அசத்தியிருந்தது. அத்தோடு, அதை அவன் ஏற்கெனவே எங்கோ பார்த்திருப்பதாய் உணர்ந்தான். எங்கே எங்கே என்று யோசித்தபடியே ஓட்டலை நெருங்கிவிட்டான். அதைத் தங்கள் அறையில் கொண்டு வந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

ஆ, வந்துவிட்டது ஞாபகத்திற்கு அது. ஊர் தள்ளி, எல்லையில் ஓர் பாழடைந்த கோயிலில் அவற்றையெல்லாம் பார்த்திருக்கிறான், அய்யனார் மற்றும் குதிரைகள்.

அவர்களுடைய குதிரைப் பொட்டலத்தைச் சுட்டிக்காட்டி, அதைவிடப் பெரிய மண் குதிரை ஓரிடத்திலிருப்பதாயும் அதைத் தான் மறுநாள் காட்டுவதாகச் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள் பெரு வியப்படைந்திருக்க வேண்டும்.

அவர்கள் காரில் புறப்பட்டனர் காத்தமுத்து வழி சொல்லிக் கொண்டே போனான். காரை பாதையோரமாய் நிறுத்தி விட்டு வயலில் இறங்கி நடக்க வேண்டுமென்றான். சிறு காடு போன்ற இடம் வந்ததும் அவர்கள் அந்த உருவங்களைக் கண்டனர். இரண்டு அய்யனார்கள், நான்கைந்து குதிரைகள். துருப் பிடித்த சூலங்கள்.

வெள்ளைக்காரத் தம்பதிகள் அய்யனார் உருவங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டார்கள். நிறைய புகைப்படங்கள் எடுத்துக் கொண்டார்கள். குதிரையின் அருகில் காத்தமுத்துவை நிற்க வைத்துப் படமெடுத்தார்கள். அந்த மேனாட்டுப் பெண்மணி அவனிடம் மெலிந்த குரலில் கேட்டாள்: "இந்த மாதிரி குதிரை எனக்கொன்று கிடைக்குமா?"

காத்தமுத்து மொட்டை மொட்டையாகப் பதில் சொன்னான்: இங்கிருக்கிறதிலிருந்தே ஒன்றைத் தன்னால் எடுத்துத் தூக்கிக் காரில் வைக்க முடியுமென்று கூறினான்.

உடனே அவள் உருவங்களைப் பார்த்தாள். சூலங்களும் அதில் தொங்கும் காய்ந்த பூமாலைகளும் அவளை இன்னொரு முறை யோசிக்க வைத்திருக்கலாம். ஒருவித நடுக்கத்தோடு தோளைக் குலுக்கிக் கொண்டே "ஈல்லே...ஈல்லே..." என்றாள்.

சற்று தூரத்தில் மண்ணில் சுடுமண்ணுருவம் ஒன்று கிடப்பதைக் கண்டு சொல்லி அவர்களை அங்கே அழைத்துப் போனான்.

''ஓ, எவ்வளவு அழகானது! எவ்வளவு அற்புதமானது!'' என்றாள் அந்த மாது.

ஓர் அய்யனார் குதிரையின் தலைப் பகுதி மட்டுமே அது. கழுத்திலிருந்து தலை. கழுத்தும் தலையும் மட்டுமே அது. உடல் பகுதி காணோம். சற்று தூரத்தில் நிற்கும் உருவங்களை விடவும் காலத்தால் பழையது என்பதை அந்த மேனாட்டுத் தம்பதிகள் புரிந்துகொண்டனர். அங்கே வழிபாட்டிலிருக்கும் உருவங்களைக் காட்டிலும் இந்த பின்ன உருவம் கலை வேலைப்பாட்டில் மேம்பட்டதாய்த் தோன்றியது.

''இதை நாங்கள் எடுத்துக் கொள்வதில் யாருக்கும் எவ்வித கஷ்டமுமில்லையே?'' என்று அவனுக்குப் புரியும் விதத்தில் சொற்களாயும் சைகைகளாயும் வெளிப்படுத்தினாள் அந்த மாது.

ஆனால் அது பின்னமானதாயிற்றே என்றான் இவன்.

பரவாயில்லையென்று கூறிவிட்டு அந்தக் குதிரை தலையை ஒரு புரட்டு புரட்டினாள் அவள். அடுத்த கணமே கிறீச்சிட்டலறிவிட்டாள்.

அந்தத் தலையின் பொந்திலிருந்து—என்ன வகையோ தெரியவில்லை—ஒரு பாம்பு நெளிந்து வெளியேறி மறைந்தது.

காத்தமுத்து அதைத் தூக்க முற்பட்ட போது மேனாட்டு மாது அவனைத் தடுத்து விட்டு, ''ஈல்லே...ஈல்லே...'' என்றாள்.

—இதென்னடா சுத்த பேஜாரு கிராக்கி என்று முணுமுணுத்துக்கொண்டான். என்ன சொல்லியும் அந்தக் குதிரை தலையைத் தூக்க வேண்டாமென்று சொல்லிவிட்டு சில பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

எதற்காகப் பணம் தருகிறாள் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

''இல்லே...வாணாம்'' என்று மறுத்தான்.

அவளோ, ''ஈல்லே...ஈல்லே...'' என்று மட்டுமே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே ரூபாய் நோட்டுக்களை அவனது கையில் திணிக்க முற்பட்டாள் திரும்பி தூரத்திலிருக்கும் சூலங்களைப் பார்த்தாள்.

இவனும் திரும்பிச் சொன்னான்: ''இல்லே வாணாம்...''

''ஈல்லே...ஈல்லே...''

அவளது அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுவதின் மூலமாக மட்டுமே தனக்குப் புரிந்து கொள்ளுதலில் விளையும் சங்கடத்தையும் சந்தேகத்தையும் உதறித் தள்ளிப் புறக்கணிக்க முடியுமென்று நினைத்தான்.

''சரி,'' என்று உதிர்த்துவிட்டு வாங்கிக் கொண்டான். அப்போது அவர்கள் போய் காரில் உட்கார்ந்தார்கள். கார் செல்லும் போது அவள் பைனாகுலரை வைத்து சூலங்களையே பார்த்தபடியே இருந்தாள் என்பது காத்தமுத்துவுக்குத் தெரியாது. ★

---

# புயலுக்கு ஓய்வில்லை!

**வையவன்**

புயல் ஓய்வெடுப்பதில்லை
உலவ வருமுன்
தென்றல்
தன்னை அலங்கரித்துக்
கொள்வதுபோல்
அது பயிற்சியெடுக்கிறது,
தன் பாசறையில்.
புயல் மெதுவாகத்தான்
பயிராகிறது;
வாடையும் தென்றலும்
வரப்பில் மேயும்

இளங் கன்றுகள் போல்
அதன் வயல்களில்
துள்ளி ஓடிவிடும்.
வளைகுடா விட்டு
விர் குடாவிற்கான
நெடும்பயணத்திற்கு
புயல் எப்போதும்
தன்னை
தயாரித்துக் கொண்டே
இருக்கிறது.
ஒரு பயணம்

முடிந்தால்
மறு பயணம்
அதற்குக் காத்திருக்கிறது
புயலுக்கு ஓய்வில்லை
காலதாமதமாகலாம்
ஒருக்காலும்
சத்தியம்
காலாவதியாவதில்லை.
புயல் ஒரு சத்தியம்
சத்தியமும் ஒரு புயல்தான்
அவை ஓய்வெடுப்பதில்லை.

# நா.பா.வும் தீபமும்: சில நினைவுகள்

தி. க. சிவசங்கரன்

அருமை நண்பர் நா.பா. அமரராகி விட்டார் என்பதை நினைத்துப் பார்க்கவே துயரமாக இருக்கிறது.

1964 டிசம்பர் 14ல் நான் நிரந்தரமான சென்னைவாசியானபோது, அவருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது.

'கல்கி'யிலிருந்து விலகிய நா. பா., 'தீபம்' என்ற பெயரில் ஓர் இலக்கிய மாத இதழைத் தொடங்கப் போவதாகவும், அதற்கு நான் தொடர்ந்து எழுத வேண்டும் என்றும் கேட்டார். மகாகவி பாரதியின் லட்சியங்களைத் தாங்கி நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தீபம் பணியாற்றும்: எழுத்தாளனின் படைப்புச் சுதந்திரம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்றார். எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது.

1965 ஏப்ரலில் தீபம் முதல் இதழ் வந்த பொழுது, உடன் இருந்த பல எழுத்தாளர்கள் மற்றும் ஆதரவாளர்களில் நானும் ஒருவன். அந்த முதல் இதழில் என் கட்டுரையொன்றும் வந்துள்ளது. அதன் பின், மாலை வேளைகளில் அடிக்கடி தீபம் அலுவலகத்திற்குச் செல்வது என் வழக்கமாகிவிட்டது.

'மணிக்கொடி' சீனிவாசன், 'தினமணி', 'தினசரி' ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், பேராசிரியர் நா. வானமாமலை, முன்னணி எழுத்தாளர் தொ. மு. சி. ரகுநாதன் முதலியோரைப் பேட்டி கண்டு கட்டுரைகள் எழுதினேன்.

அதன் பிறகு, தீபத்தில் வெளிவந்த இலக்கிய விவாதங்கள், புத்தக மதிப்புரைகள், இவற்றில் என் பங்கும் ஓரளவு உண்டு. கடந்த 23 ஆண்டுகளில் தீபத்துடன் எனது தொடர்பு, (நான் அடிக்கடி எழுத முடியாவிட்டாலும்) இருந்து வந்தது; ஏதோ ஒரு வகையில் இனிய முறையில் வளர்ந்து வந்தது.

அந்தக் காலகட்டத்தில் 'மணிக்கொடி' சீனிவாசன், தி. ஜ. ரங்கநாதன், வெ. சாமிநாத சர்மா போன்ற மூது பெரும் எழுத்தாளர்களின் ஆசியும் ஆதரவும் தீபத்திற்கு இருந்தன.

பிற்காலத்தில் பி. எஸ். ராமையா, கு. அழகிரிசாமி, சிட்டி, சிதம்பர சுப்ரமண்யம், சி. சு. செல்லப்பா, சோ. சிவபாதசுந்தரம்; திருப்பூர் கிருஷ்ணன், சேவற்கொடியோன் போன்ற பல அன்பர்களின் ஆதரவும் தொடர்ந்தது. வல்லிக்கண்ணனின் எழுத்துக்கள் கடந்த 23 ஆண்டுகளாகத் தீபத்தில் இடையறாது வந்துள்ளன என்பது ஒரு மாபெரும் சாதனையாகும்.

ஆதவன், இந்திரா பார்த்தசாரதி, அசோகமித்திரன், நாஞ்சில் நாடன், வண்ணதாசன் முதலிய பல எழுத்தாளர்களின் இலக்கிய மேடையாகத் தீபம் திகழ்ந்தது. சுருங்கச் சொன்னால் இமயம் முதல் குமரி வரையுள்ள எழுத்தாளர்களும், இலங்கை, மலேசியா எழுத்தாளர்களும்' தீபத்தில் இடம்பெற்றுள்ளனர்; தரமான எழுத்துக்களை வழங்கியுள்ளனர்.

தீபத்தை ஒரு தரமான இதழாக நடத்த வேண்டும்; அதில் கலை, இலக்கியம் பற்றிய ஆழமான விஷயங்கள் வர வேண்டும் என்பதில் ஆசிரியர் நா.பா.வும், துணை ஆசிரியர் திருமலையும் எப்போதும் தெளிவாக இருந்தனர் என்றே கூற வேண்டும்.

நல்ல இலக்கியத்தை வளர்ப்பதிலும், பண்பாட்டைச் சீரழிக்கும் நச்சு இலக்கியங்களை எதிர்த்துப் போராடுவதிலும் நா. பா. உறுதியாக இருந்தார். தடது எழுத்துக்கள். மேடைச் சொற்பொழிவுகள், எழுத்தாளர் அமைப்புகள், இவற்றின் வாயிலாக நா.பா. செய்துள்ள சீரிய பணிகளைத் தமிழ்மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பர். நா.பா.வின் உன்னத லட்சியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலேயே தீபத்தின் ஒவ்வொரு இதழும் அமைந்துள்ளது.

சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், திறனாய்வு மற்றும் பல துறைகளில் இன்றைய தமிழ் இலக்கியம் வளருவதற்குத் தீபம் ஆற்றி

யுள்ள அரும்பணிகளை இந்தச் சின்னஞ்சிறு கட்டுரையால் அளவிட இயலாது. தீபத்தில் வந்துள்ள கதைகளும், கட்டுரைகளும் இரண்டு தொகுப்புக்களாகப் பிரசுரமாகியுள்ளன; 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற அளவில், தீபத்தின் சாதனைக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றன.

முதிய எழுத்தாளர்களுக்கு மட்டுமின்றி, இளம் எழுத்தாளர்களுக்கும் இடம் தந்து, நவீன தமிழ் இலக்கியத்தின் ஒவ்வொரு துறைக்கும் சீரிய பணியாற்றியுள்ள நா.பா.வின், தீபத்தின் சேவைகளை மனச்சாட்சியுள்ள எந்தத் தமிழ் எழுத்தாளனும் வாசகனும் மறக்க முடியாது.

நா.பா.வின் மறைவுக்குப் பின்னர், தீபத்திற்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது; தீபத்தின் வாழ்வுடன் தம் வாழ்வைப் பின்னிப் பிணைத்துள்ள ஆசிரியர் திருமலையின் வாழ்வும் எதிர்காலமும் ஒரு பெரிய கேள்விக் குறியாக உள்ளன. இத்தகைய துயரச் சூழ்நிலையில் தீபம் அணைந்துவிடக் கூடாது; அதைக் காப்பதும், பேணி வளர்ப்பதும் நம் அனைவரின் கடமையாகும்; அமரர் நா.பா.வுக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

---

நவீன தமிழ் இலக்கியச் சிற்பிகளில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்த ஒருவராகத் திகழ்ந்து அண்மையில் அமரநிலை எய்திய திரு. தீபம் நா. பார்த்தசாரதி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் இரங்கல் கூட்டமொன்று தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் சார்பில் 19-12-1987 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தலைமை வகித்து, நா. பா. அவர்களுடன் தமக்கிருந்த நட்பின் தன்மையையும்; நா.பா.வின் இலக்கியச் சேவைகளையும் நினைவுகூர்ந்தார். நா.பா.வின் அகால மறைவு தமிழின் மறுமலர்ச்சி இலக்கியத்திற்குப் பேரிழப்பு என்றூர். முதுபெரும் எழுத்தாளர் திரு. க. நா. சுப்ரமண்யம் அவர்கள் பேசுகையில் நா.பா.வுக்கும் தமக்கும் இருந்த நீண்ட காலத் தொடர்பின் சில முக்கியமான அம்சங்களை எடுத்துச் சொன்னார். நா.பா.வின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான டாக்டர் இந்திரா பார்த்தசாரதி பேசும்போது, சிறுகதைகள் மட்டுமே எழுதிவந்த தம்மை முதன் முதலாக 'தீபம்' இதழில் 'தந்திரபூமி' நாவலை எழுத வைத்து ஒரு நாவலாசிரியராக மலரவைத்த பெருமை நா.பா.வையே சாரும் என்றூர். திரு. ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி தமது அஞ்சலியில், நா.பா.வைப் பறிகொடுத்துச் சொந்த முறையிலும் பேரிழப்பை அடைந்திருப்பதாகச் சொன்னார். தரமாக எழுதத் தெரிந்த இளைஞர் பலரையும் தயங்காமல் ஊக்குவித்துத் தற்காலத் தமிழிலக்கியத்திற்குப் பல நல்ல படைப்பாளிகளை, குறிப்பாகக் கவிஞர்களை உருவாக்கித் தந்த உண்மையான ஆசிரியர் நா.பா. என்றூர் திரு. நாக. வேணுகோபாலன். தமது எழுத்தைப் பற்றி, தீபம் பத்திரிகையில் நா.பா. பாராட்டிக் கூறியிருந்த சில வரிகள் தமக்கு மிகுந்த மனநிறைவைத் தந்ததாய், திருமதி வாஸந்தி குறிப்பிட்டார். திருமதி கோமளா வரதன் தம்து கலைக்கூட நிகழ்ச்சியொன்றில் நாட்டியம் பற்றிய நா. பா.வின் சிலப்பதிகார ஆராய்ச்சி ஆங்கில உரையை நினைவு கூர்ந்தார். தென்கிழக்காசியத் தமிழ் ஒலிபரப்புப் பிரிவைச் சார்ந்த திரு. பாலரமணி, நா.பா. பங்கேற்ற வானொலி நிகழ்ச்சிகளின் சிறப்புத் தன்மையை எடுத்துச் சொன்னார். தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் திரு. ஆர். விசுவநாதன் நா.பா.வின் நாவல் திறனைச் சொன்னதோடன்றி, கூட்டத்தையும் புனித நிலை நிலவுமாறு நடத்தித் தந்தார். இலக்கிய விமர்சகர் திரு. வெங்கட்சாமிநாதன், எழுத்தாளர் திரு. லா. சு. ரங்கராஜன், திரு. கேசவன் (பூதுகன்), 'இளங்குருத்து'க் குழுவின் தலைவர் திரு. சௌந்தர்ராஜன் போன்றோரும், தமிழ் இலக்கிய அன்பர்கள் பலரும் கலந்துகொண்டு மனப்பூர்வமான அஞ்சலி செலுத்திய இந்தக் கூட்டம் நிகழ்வதற்கான அடிப்படை ஏற்பாடுகளை எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. ஏ.ஆர். ராஜாமணியும், 'பேடரியட்' வெங்கட்ராமனும் முனைந்து செய்திருந்தனர்.

—'அஸ்வினி'

மறைந்த எழுத்தாளர்கள் ஆதவன், சுப்பிரமணியராஜு, 'தீபம்' நா.பா. ஆகியோர்க்கான நினைவஞ்சலி மற்றும் அவர்களது படைப்புகள் குறித்த கருத்தரங்கம் புதுவை பாரதி சிந்தனைப் பேரவையினரால் ~-1-88 ஞாயிறு மாலை புதுமை விஸ்வபாரதி கல்வி மையத்தில் நடத்தப்பட்டது. எழுத்தாளர் பிரபஞ்சன் தலைமை தாங்கினார். நாகசுந்தரம், முரளீதரன், அவிஞசி முருகேசன், வில்லவன், ஆனந்தி, கன்செப்டா மேரி, சிவக்குமரன், ரமணி உரையாற்றினர்.

எங்கள் பேரன்பிற்கும் மரியாதைக்கும் உரிய
குடும்ப நண்பரும் இலக்கிய ஆசானுமான
திரு. நா. பார்த்தசாரதி அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறோம்.

**கோவை ஏஜன்சீஸ்**

151, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயம்புத்தூர்-18.
போன் : 32872.

## ஆர்.எஸ்.எஸ். மாநிலத் தலைவர் ஸ்ரீ வீ. ரங்கசாமித் தேவரின் இரங்கல் செய்தி

'தீபம்' நா. பார்த்தசாரதி அவர்கள் திடீரென உயிர்நீத்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

பொதுவாழ்வில் அவர் தேசிய அமைப்புகளுடன் இணைந்து தேசிய உணர்வூட்டும் முயற்சிகளில் தோள் கொடுத்தது, நாட்டு மக்கள் அனைவருக்கும் பசுமையாய் நினைவில் நிற்கும். 1970—71ல 'பாரத பாதுகாப்பு' இயக்கத்தின் மேடைகளிலும் சரி, 1978-79ல் ஆர்.எஸ்.எஸ்.ஸின் வெகுஜனத் தொடர்பு இயக்க மேடைகளிலும் சரி, அவர் தேசியத்தின் தேவையை ஆணித்தரமான வாதங்கள் கூறி வலியுறுத்தி வந்தார். ஹிந்து வாழ்க்கை முறை, காலத்தின் அறைகூவலை ஏற்பதற்கு அதீத ஆற்றல் பெற்றிருப்பதை அவர் சிறப்பாக வலியுறுத்துவார்.

சமுதாயத்தின் சிந்தனையை அவர் தமது இலக்கியக்கரங்களினால் தூண்டினார். 'குறிஞ்சி மலர்', 'பொன்விலங்கு' போன்ற நாவல்களின் மூலம் 'லட்சியத்திற்காக வாழ வேண்டும்' என்ற ஆர்வத்தை குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே ஏற்படுத்தினார். அவருக்குப் பரிசளித்ததன் மூலம் சாஹித்ய அகாடமி, தேசிய உணர்வையே போற்றியிருக்கிறது எனலாம்.

# பேரிழப்பு

வல்லிக்கண்ணன்

நண்பர் நா.பா. அவர்களின் திடீர் மரணம் ஈடு செய்ய முடியாத பேரிழப்பே யாகும்.

பொதுவாக, தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் பெரிய மனிதர்களின் மறைவின் போது, இவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று உபசாரமாய் பலராலும் சொல்லப்படுவது வழக்கம். என்றாலும் அபூர்வமாக சில பேருக்கே இவ்வார்த்தைகள் பொருந்தும். அத்தகைய பெருமைக்கு உரிய அபூர்வ மனிதர்களில் நா. பார்த்தசாரதியும் ஒருவர் ஆவார்.

நா.பா. ஒரு தனிநபர். ஆயினும் சக்தி மிக்க ஒரு இயக்கம் போல் திகழ்ந்து அவர் அரிய சாதனைகள் பல புரிந்திருக்கிறார்.

முதலில் அவருடைய சுயவளர்ச்சி. சாதாரண நிலையிலிருந்து, உழைப்பினாலும் ஊக்கத்தினாலும், தன்னம்பிக்கையோடும் பாடுபட்டு, வளர்ந்து, தான் தேர்ந்து கொண்ட வழியில் ஒரு உயர்ந்த இடத்தை எட்டிப் பிடித்தவர் அவர்.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக, புலவராக, தனது வாழ்க்கையை ஒதுக்கிக் கொள்ள விரும்பாது, எழுத்தாளன் ஆகி, அத்துறையில பெருமைக்கும் புகழுக்கும் உரியவராகத் தன்னைத் தகுதிபடுத்திக் கொண்ட சாதனையாளர் நா. பா.

குறிஞ்சிமலர், பொன்விலங்கு முதலிய இலட்சிய ஒளி நிறைந்த நாவல்களும், தேசபக்தி, பண்பாட்டு உயர்வு, அறநெறி போற்றல் முதலிய உயர்ந்த குறிக்கோளுடன் எழுதப்பட்ட 'ஆத்மாவின் ராகங்கள்', 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' போன்ற படைப்புகளும் நா. பா. அவர்களுக்கு நட்சத்திரப் புகழை கொண்டு சேர்த்தன.

பின்னர், இலட்சிய வேகமும் கனவுத் தன்மையும் கொண்டிருந்தாலும், யதார்த்த நிலைமைகளை விவரித்து, சமூக அவலங்களையும், மனிதகுலச் சிறுமைகளையும் சீர்கேடுகளையும் ஒரு தர்ம ஆவேசத்தோடு—தார்மீகக் கோபத்தோடு—சாடி அவர் எழுதிய பலப் பல நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள் எல்லாம் நா.பா.வின் ஆற்றலை, சமுதாய உணர்வை, உணர்ச்சி வேகத்தை, சிந்தனைத் திறனை, நேர்மையான வழியில் செயல்புரிய வேண்டும்—செயலாற்ற வழிகாட்ட வேண்டும் எனும் துடிப்பைப் புலப்படுத்துகின்றன.

பண்டிதராக, புலவராக, எழுத்துத்துறையில் பிரவேசித்த நா.பா., அறிஞர் மு.வ. போல, பழமைக்கும் (மரபுக்கும்) புதுமைக்கும் ஒரு இணைப்புச் சக்தியாக விளங்கும் வகையில் தன்னை தகுதிபடுத்திக் கொண்டது ஒரு பெரும் சாதனைதான்.

தன்னை வளர்த்துக்கொள்ள ஓயாது உழைத்த வேளையிலேயே தகுதி வாய்ந்தவர்களுக்கும், திறமையாளர்களுக்கும், அவரது அன்புக்கும் நட்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களுக்கும் தக்க முறையில் உதவி புரியவும், அவர்களுடைய திறமை நன்கு வெளிப்பட்டு ஒளிர்வதற்குத் தேவையான வாய்ப்புக்களைத் தேடிக் கொடுக்கவும் நா.பா. தாராள மனசுடன் செயலாற்றினார்.

'தீபம்' பத்திரிகை மூலம் புதிய (இளைய) எழுத்தாளர்களின் வளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு அளித்ததும், முதிய எழுத்தாளர்களின் வரலாற்று அனுபவமும் ஆய்வு நோக்கும் கொண்ட எழுத்துக்கள் தொடர்ந்து வருவதற்கு வசதி செய்து தந்ததும் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

'தீபம்' பத்திரிகையை, இலக்கியத் தன்மையோடும் இலட்சிய நோக்குடனும் 23 வருடங்கள், சிரமங்களையும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், நடத்திவந்தது நா.பா.வுக்குப் பெருமை சேர்க்கும் அரிய சாதனை என்பதில் சந்தேகம் இல்லை.

ஆதவன், வண்ணதாசன், நாஞ்சில் நாடன், விட்டல்ராவ் போன்றவர்களின் திறமை வளர்ந்து பிரகாசிப்பதற்கும், மோகனன் போன்ற இளைய எழுத்தாளர்கள் உற்சாகமாக எழுத்தில் ஈடுபடுவதற்கும் 'தீபம்' பெரிதும் உதவியிருக்கிறது.

பி. எஸ். ராமையா 'மணிக்கொடிக் காலம்' எழுதுவதற்கும், நான் சரஸ்வதி காலம், புதுக்கவிதையின் தோற்றமும்

வளர்ச்சியும், பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை, தமிழில் சிறுபத்திரிகைகள் ஆகியவற்றை எழுதி முடிப்பதற்கும் நா.பா.வின் உற்சாகமூட்டும் ஆதரவும், 'தீபம்' அளித்த சுதந்திரமுமே அடிப்படைகளாக அமைந்திருந்தன. சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து அனுபவங்கள்', 'விமர்சனத் தேடல்' ஆகிய ஆழமும் கனமும் நிறைந்த கட்டுரைத் தொடர்கள் 'தீபம்' இதழில் வெளிவருவதற்கும் நா.பா. அவர்களின் அன்பும் ஊக்கமுமே காரணமாகும்.

அதே போல, நா.பா. இலக்கியவாதிகளை கவுரவித்து, அவர்களுக்கு உரிய கவனிப்பு கிடைக்கும் விதத்தில் தகுந்த முறையில் செயலாற்றியதற்கு சாகித்தியஅகாடமிப் பரிசுகள் படைப்பாளிகளுக்குத் தொடர்ந்து கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டதைக் குறிப்பிட வேண்டும். கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், தி. ஜானகிராமன், பி.எஸ். ராமையா, க.நா.சுப்ரமண்யம் ஆகிய இலக்கியவாதிகளுக்கு அப்பரிசுகள் கிடைப்பதற்கு நா.பா.வின் இலக்கிய ஆர்வமும், அன்பும, திறமையாளர்களை உரிய முறையில் கவுரவிக்க வேண்டும் என்கிற அந்தரங்க உணர்வுமே ஆதார சக்தியாக அமைந்திருந்ததை இலக்கிய நண்பர்கள் அறிவர்.

எழுத்தாளன், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை முதலியவற்றை எழுதுவதுடன் — அப்படி எழுதுவதால் கிடைக்கிற பெயருடனும் புகழோடும்— ஒதுங்கி இருந்துவிடக் கூடாது என்ற கருத்து உடையவர் நா.பா.

எனவே, அவர் சமுதாயப் பொறுப்புடன், செயல்களிலும் ஈடுபட்டார். அரசியலில் அக்கறை காட்டினார். அரசியல் கட்சிகளின் கோளாறான போக்குகளை, அரசியல் வாதிகளின் குறைபாடுகளை, சமூகச் சீர்கேடுகளை எல்லாம் எழுத்தில் அம்பலப்படுத்தியதுடன், மேடைகளிலும் உணர்ச்சி வேகத்தோடு சுட்டிக்காட்டி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இதற்காக, தனது ஆரோக்கியத்தைப் பற்றிக் கவலைப்படாமலே, ஊர் ஊராகச் சுற்றினார்.

தற்கால இலக்கியம் தனக்கு உரிய இடத்தைப் பெற வேண்டும் என வலியுறுத்துவதிலும், அதற்குத் தன்னால் இயன்ற அளவு உழைப்பதிலும் நா.பா. இறுதிவரை ஆர்வம் காட்டி வந்தார்.

சாகித்திய அகாடமி பிரசுரித்து வருகிற 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் இன்றைய இலக்கியம் உரிய இடத்தைப் பெறுவதில் நா.பா. காட்டிய ஈடுபாடும் பாங்கும் பெரியதாகும். புதுமைப்பித்தன் பற்றிய புத்தகம் வருவதற்கும், கு.ப. ராஜகோபாலன் பற்றிய புத்தகம் எழுதப்படுவதிலும் அவர் தீவிர அக்கறை கொண்டிருந்தார்.

1987 நவம்பரில் சாகித்திய அகாடமி புதுடில்லியில், அகில இந்திய நோக்கில், 'புதுமைப்பித்தன் நினைவுக் கருத்தரங்கு' நடத்தியது. இப்படி ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று க.நா.சு. யோசனை கூறியதும், அது செயல் மலர்ச்சி பெறுவதற்கு நா.பா. பூரண ஒத்துழைப்பு தந்து பணிபுரிந்தது முக்கியமாகும்.

இவ்வாறு பல வழிகளிலும் இலக்கிய சேவை புரிந்துகொண்டிருந்த நா.பா. அவர்களுக்கு மேலும் பெருமையும் புகழும் சேர்க்கூடிய வாய்ப்புகள் காத்திருந்தன. அவர் முழு மனத்துடன் ஈடுபட்டு, சிறப்பாகச் செய்து முடித்திருந்த ஆய்வுக்கான 'டாக்டர்' பட்டம் கிடைக்கும் வேளை வந்திருந்தது. இதர பெரும் கௌரவங்களும் அவரை வந்து அடைந்திருக்கும்.

அதற்கெல்லாம் தகுதியானவர்தான் நா.பா. கடும் உழைப்பினாலும், தளராத தன்னம்பிக்கையோடும், அளவிலா உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் அவற்றுக்கெல்லாம் தன்னை தகுதிப்படுத்திக்கொண்ட மாமனிதர் அவர்.

நா.பா. உழைப்பின் உற்சாகத்தின், நம்பிக்கையின், பன்முகத் திறமைகளின் வடிவமாக விளங்கினார். அன்பும், நட்பும், நற்பண்புகளும் குடிகொண்டிருந்த நல்ல மனிதர் அவர். நா.பா. எனக்கு நண்பர் மட்டுமல்ல; எனது வாழ்வின் நலத்திலும் வளத்திலும் அக்கறைகொண்டிருந்த அன்புச் சகோதரரும் —ஆவார்.

அவருடைய மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்புதான். ★

**Edited and Published by S. Thirumalai at 6, Nallathambi Chetty Street, Madras-2. and Printed by him at Deepam Achagam, Madras-600002**

**Founder Editor: Naa. Parthasarathy M.A.B.Lit.**

# சாரதி நீர் வாழ்க!

**தேவிமைந்தன்**

பாரதத்தை வாழவைக்கப் பாட்டெழுதிப் பாட்டெழுதிப்
பூரதத்தில் ஏறிவிட்ட பொன்மகன் பாரதியின்
பாதையினில் நடந்திட்ட பார்த்த சாரதி!
சாதனைகள் பலகண்ட சத்திய உபாசக!
பிறந்த மண் சிறந்திடப் பற்பல வகையிலும்
அரும்பணி புரிந்திட்ட ஆர்வமிகு தமிழ!
குணம் நிறை பூரணி கொள்கை அரவிந்தன்
மணம் நிறை காதலின் மலரொன்று தந்தீர்!
நெஞ்சக் கனல் கொண்டு நெற்றிக் கண் திறந்தீர்!
அஞ்சாத சத்தியம் அணிகின்ற பொன்விலங்கு
சமுதாய வீதியினைச் சீராக்க நீரெழுதிய
அமுதான ஓவியங்கள் அத்தனையும் காவியங்கள்
பொங்கிவரும் சீலங்கள் சங்கமிக்கும் எழுத்துக்கள்
கங்கை இன்னும் வற்றவில்லை!
கடைசிவரை வற்றாது!
கோபுர தீபமெனக் கொள்கைத் திரமுடன்
தீபமொன்று ஏற்றினீர், திக்கெட்டும் தமிழ் விளங்க!
எழுத்திலே பேச்சிலே எதிலுமே இளமை
அழுத்தமிகு கொள்கை அழகுமிகு ரசனை
எழுத்துக்கு இலக்கியமாய் எழிலுற வாழ்ந்தாய்!
அழகு தமிழ்ச் செல்வ! அன்பு மணி வண்ண!
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம் என்று
அழகொழுகச் சொன்ற அமரகவி பாரதி
பாதையினில் சென்றிட்ட பார்த்த சாரதி!
பூதலத்தினில் உன்பெயர் என்றும் வாழ்க!



# நா. பார்த்தசாரதி அவர்கள் நூல்கள்

நாவல்கள் :

| | ரூ. | பை. |
|---|---|---|
| குறிஞ்சி மலர் | 23 | 00 |
| பொன்விலங்கு | 42 | 00 |
| பட்டுப்பூச்சி | 5 | 00 |
| நெற்றிக்கண் | 13 | 50 |
| கபாடபுரம் | 7 | 00 |
| மலைச்சிகரம் | 4 | 50 |
| பாண்டிமாதேவி | 39 | 00 |
| மணிபல்லவம் | 39 | 00 |
| பிறந்தமண் | 10 | 50 |
| நினைவின் நிழல்கள் | 7 | 00 |
| நீலநயனங்கள் | 20 | 00 |
| அறத்தின் குரல | 21 | 00 |
| வெற்றி முழக்கம் | 20 | 00 |
| பொய்ம்முகங்கள் | 10 | 00 |
| அனிச்சமலர் | 3 | 50 |
| புத்த ஞாயிறு (நாடகம்) | 9 | 00 |
| மனக்கண் | 6 | 00 |
| முள்வேலிகள் | 16 | 00 |
| கோபுர தீபம் | 14 | 00 |
| நெஞ்சக்கனல் | 10 | 00 |
| வஞ்சிமாநகரம் | 5 | 25 |
| சமுதாய வீதி | 18 | 00 |
| (சாகித்ய அகாதமி பரிசுபெற்றது) | | |
| ஆத்மாவின் ராகங்கள் | 11 | 50 |
| நித்திலவல்லி | 15 | 00 |
| மகாத்மாவைத் தேடி | 4 | 75 |
| சத்திய வெள்ளம் | 20 | 00 |
| கற்சுவர்கள் | 6 | 75 |
| துளசி மாடம் (ராஜா சர் பரிசு) | 22 | 00 |
| ராணி மங்கம்மாள் | 11 | 00 |
| நிசப்த சங்கீதம் | 12 | 00 |
| சாயங்கால மேகங்கள் | 20 | 00 |
| (த.நா. அரசு பரிசு) | | |
| சுந்தரக் கனவுகள் | 18 | 00 |
| மூலக்கனல் | 13 | 50 |
| இலையுதிர் காலத்திரவுகள் | 1 | 50 |
| புதுமுகம் | 10 | 00 |

சிறுகதைத் தொகுதிகள் :

| | | |
|---|---|---|
| வலம்புரிச் சங்கு | 5 | 00 |
| மூவரை வென்றான் | 4 | 50 |
| நெருப்புக் கனிகள் | 4 | 50 |
| மங்கியதோர் நிலவினிலே | 6 | 00 |
| புதிய பாலம் | 6 | 00 |
| வேனில் மலர்கள் | 7 | 00 |
| தகடூர் யாத்திரை | 4 | 00 |
| தமிழிலக்கியக் கதைகள் | 7 | 50 |
| தலைமுறை இடைவெளி | 5 | 00 |
| பூக்களை யாரும் மிதிக்கக் கூடாது | 6 | 00 |
| இராஜகோபுரம் | 4 | 00 |
| காலத்துக்கு வணக்கம் | 5 | 00 |
| கண்ணன் கதைகள் | 9 | 50 |
| கங்கை இன்னும் வற்றிவிடவில்லை | 4 | 50 |
| தூங்கும் நினைவுகள் | 4 | 00 |
| தேவதைகளும் சொற்களும் | 3 | 00 |
| ஒப்புரவு | 5 | 50 |
| பிரதிபிம்பம் | 5 | 00 |
| புறநானூற்றுச் சிறுகதைகள் | 5 | 50 |
| இது பொதுவழி அல்ல | 6 | 00 |
| கொத்தடிமைகள் | 7 | 00 |
| ஒரு கவியின் உள் உலகங்கள் | 9 | 00 |

கவிதை—கட்டுரை—ஆராய்ச்சி நூல்கள் :

| | | |
|---|---|---|
| சொல்லின் செல்வம் | 5 | 00 |
| மொழியின் வழியே | 6 | 00 |
| கவிதைக் கலை | 7 | 00 |
| நானூற்றில் நல்ல காட்சிகள் | 1 | 00 |
| சரத் சந்திரர் (மொழிபெயர்ப்பு) | 15 | 00 |
| வீரேசலிங்கம் (மொழிபெயர்ப்பு) | 2 | 50 |
| நாளுலால் (மொழிபெயர்ப்பு) | 4 | 00 |
| பூமியின் புன்னகை (கவிதைகள்) | 7 | 50 |
| புதிய பார்வை | 3 | 00 |
| மணிவண்ணன் கவிதைகள் | 3 | 00 |
| கடற்கரை நினைவுகள் | 5 | 00 |
| சிந்தனை மேடை | 4 | 00 |
| புது உலகம் கண்டேன் | 7 | 50 |
| சிந்தனை வளம் | 10 | 50 |
| ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள் | 12 | 00 |
| திறனாய்வுச் செல்வம் | 10 | 00 |

விவரங்களுக்கு

## தமிழ்ப் புத்தகாலயம்,

58, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.